# தமிழ்மக்கள் பற்றிய எனது தப்பபிப்பிராயம் அகன்றது!

Registered as a News Paper in Ceylon    விலை சதம 15    ★★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டிஇலக்கம் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 214
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆவணி 28 றஜபு 11 ஞாயிற்றுக்கிழமை (13-9-70)



பொ. அம்பலவாணர்
தங்க வைர
நகை வியாபாரம்
119, கஸ்தூரியார் றோட்,
யாழ்ப்பாணம்.

B. R. C. பெப்ரிக்
நிர். 6, 7, 8, 9
10 — 12
கிடைக்குமிடம்:-
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7130

## யாழ். விஜயம் தந்தபலன்

### அனுரா பேச்சு

யாழ்ப்பாணம், ஞாயிறு
இதுவரை காலமும் எனது மனதில் தமிழ் மக்களைப் பற்றி இருந்துவந்த தப்பபிப்பிராயபேதம் இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம்செய்ததினால் முற்றாக அகன்றுவிட்டது. எனது எண்ணத்திற்கு முற்றிலும் மாறுபட்டதாக தமிழ்மக்கள்எம்முடன் ஒத்துழைத்துக்கொண்டிருப்பதை நான் இங்கு கண்டேன்'

இவ்வாறு திரு. அநுரா பண்டாரநாயகா இன்று ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி யாழ். கிளையினால் அளிக்கப்பட்ட வரவேற்புக்கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

திரு. அல்பிரட் துரையப்பா தலைமையில் கூட்டம் நடைபெற்றது. பெலியத்த எம்.பி. திரு. மகிந்தா ராஜபக்சாவும் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

திரு. அநுரா மேலும்பேசுகையில் கூறியதாவது:-

எமது அரசாங்கம் இந்த நாட்டுமக்கள் அனைவரையும் ஒன்றுபடுத்தி, ஐக்கியமாக வாழவே விரும்புகிறது. ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி தமிழ்மக்களுக்கு விரோதமானது என்று எமதுஎதிர்க்கட்சியினரும் தமிழரசுக்கட்சியினரும் பிரசாரம்செய்துவருகிறார்கள். அதில் எதுவித உண்மையுமில்லை. எமது கட்சி தமிழ் மக்களுக்கு விரோதமானதல்ல; தமிழரசுக்கட்சிக்குத்தான் விரோதமானது என்பதை நான் இங்கு தெளிவுபடுத்திவைக்க விரும்புகிறேன்.

கடந்த காலத்தில் தமிழர்களைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் நாம் மறைக்கப்பட்டிருந்தோம். இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழரசுக் கட்சியும் தான். அக்காலத்தில் பரஸ்பர ஒற்றுமை நிலவவேயில்லை.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு நல்ல ஆதரவு இருந்துள்ளது என்பதை நான் உணர்கிறேன். தனிநபராக நின்று, இரு அரசியல் கட்சிகளுடன் போட்டியிட்ட எமது முக்கிய ஆதரவாளரான திரு. அல்பிரட் துரையப்பா 56 வாக்குகளால் மட்டும் தோற்கடிக்கப்பட்டதிலிருந்து இதை தெளிவாகக் கூறுகின்றேன், நான் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வரும்போது திரு. துரையப்பா மேயராகமட்டுமல்லாமல், போட்டியின்றி தெரிவு செய்யப்பட்ட ஆட்சிமன்ற உறுப்பினராகவும் இருப்பார் என்று கூறிவைக்க விரும்புகிறேன்'

பெலியத்தை எம். பி. திரு. மகிந்தா ராஜபக்சா பேசுகையில் கூறியதாவது:

தமிழரசு எம். பிக்கள் அமைச்சு அலுவலகங்களிலிருந்து கிடைக்கும் சிங்களக் கடிதங்களை ஏற்றுக்கொள்ள முடியாதென்று திருப்பி அனுப்பி வருவதாக கூறிக்கொள்கிறார்கள். ஆனால் சிங்களத்தில் கையப்பமிட்டு அரசாங்கத்தால் அனுப்பி வைக்கப்படும் காசோலைகளை திருப்பி அனுப்புகிறார்களில்லை.

தமிழ் மொழிக்காக அல்லும் பகலும் உழைத்து வருவதாகக் கூறிக்கொள்ளும் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் தங்களது பிள்ளைகளை சிங்களம் படிக்கச்செய்துவிட்டு, தமிழ்மக்களாகிய உங்களைச் சிங்களம் படிக்கவேண்டாமென கூக்குரலிடுகிறார்கள்.

திரு. துரையப்பா, திரு. ஜி ஏ. ராஜசூரியர், ஜனுப் காதர் ஆகியோரும் பேசினர்.

திரு. அநுரா யாழ்ப்பாணம்கோட்டை, நவீனமார்க்கட், லைடன் ஸ்தாபனம் ஆகியவற்றுக்கும் சென்று பார்வையிட்டார். பலத்த பொலிஸ்பாதுகாப்பும் அளிக்கப்பட்டிருந்தது. (கு வி ம)

வரவு செலவு

## சிறுபான்மை மக்களின் அடிப்படை உரிமைகள்

# தமிழ்ப் பிரமுகர்கள் குழுவுடன் காங்கிரஸ் ஒத்துழைக்க முடிவு

## ராஷ்டிரபதி உத்தரவு மன்னர்கள் மனுதாக்கல்

புதுடில்லி, செப். 12
மூன்று முன்னாள் சமஸ்தான மன்னர்கள் இந்திய ஜனாதிபதியின் உத்தரவை எதிர்த்து சுப்ரீம்கோர்ட்டில் ரிட்மனு வொன்றை இன்று தாக்கல் செய்தனர்.

பழைய மன்னர்களின் மான்யத்தை ஒழிக்கும் விசேஷ உத்தரவொன்றை ஜனாதிபதி பிறப்பித்திருந்தார். இவ்வுத்தரவை எதிர்த்தே பட்னா, ராணவதி ஆகிய சமஸ்தான மன்னர்கள் இந்திய சுப்ரீம் கோர்ட்டில் ரிட்மனு தாக்கல் செய்துள்ளனர்.

இந்திய ராஜ்ய சபையில் மன்னர்களின் மான்ய ஒழிப்பு மசோதா ஒருவாக்கால் தோல்வியடைந்ததும், ஜனாதிபதிக்கு உள்ளவிசேஷ அதிகாரத்தை பயன்படுத்தி இவ்வுத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதனை தங்கள் உயிர் உள்ளவரை ஒன்றுபட்டு எதிர்க்கப் போவதாகவும், தங்கள் சாம்பலில் ஜனநாயகம்மலரும் எனவும் முன்னாள் மன்னர்கள் கூறியிருந்தனர்.

## இந்திராமகன் கார்தொழிற்சாலை அமைப்பார்

புதுடில்லி, செப். 12
சிறிய கார் தொழிற்சாலை அமைப்பதற்கு இந்தியப் பிரதமர் இந்திராகாந்தியின் மகன் சஞ்சாய்க்கு அனுமதி அளிப்பதென கொள்கை அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இச்சிறிய தொழிற்சாலைக்கு 3 கோடியே 72 லட்சம் ரூபா முதலீடுசெய்யப்படும்: வருடத்திற்கு 50 ஆயிரம் கார் உற்பத்தி செய்யப்படும் முழுக்கமுழுக்க உள்நாட்டுப் பொருட்களாலேயே இக்கார்கள் தயாரிக்...

## அரசியல் அமைப்பு அமைச்சுக்கு ஓரேவித அறிக்கை அனுப்புவர்?

யாழ்ப்பாணம், ஞாயிறு
இலங்கையை ஒரு சோஷலிஸக் குடியரசு நாடாக்கும் பொருட்டு உருவாக்கப்பட்டு வரும் புதிய அரசியல் அமைப்பில் சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கக்கூடிய அம்சங்களடங்கிய மகஜர் ஒன்றைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள தமிழ்ப் பிரமுகர்கள் குழுவுடன் ஒத்துழைப்பதற்கு தமிழ்க் காங்கிரஸ் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

சில தினங்களுக்கு முன் ... அம்சங்கள் எடுத்து ... காட்டப்பட்டன. ... அங்கு கூடியிருந்த பலரும் அவற்றில் திருப்தி தெரி... புவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இம்மாதம் 15-ம் திகதி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aayanaham.org

[illegible] உத்தரவொன்றை ஜனுதிபதி பிறப்பித்திருந்தார். இவ்வுத்தரவை எதிர்த்தே பட்நா, ராணுவதி ஆகிய சமஸ்தான மன்னர்கள் இந்திய சுப்ரீம் கோட்

[illegible] உயிர் உள்ளவரை ஒன்றுபட்டு எதிர்க்கப் போவதாகவும், தங்கள் சாம்பலின் ஜனநாயகம்மலரும் எனவும் [illegible] கூறியிருந்தனர்.

# விநாயகர் சிலை எப்படித்தோன்றியது?

## விசாரணைக்கு உத்தரவு

சென்னை, செப். 12

சில தினங்களுக்கு முன் சென்னையில் தியாகராஜ நகர்ப் பகுதியில், திடீரென விநாயகர் சிலையொன்று தோன்றியிருப்பது குறித்து விசாரணை நடத்தும்படி தமிழ்நாடு அரசு உத்தரவிட்டிருக்கின்றது. பொலிஸ் விசாரணை ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமையன்று இப்பகுதியில் விநாயகர் சிலையொன்று திடீரென்று தோன்றியது பொதுமக்களுக்குப் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. அதிகாலையில் சுமார் 2-30 மணியளவில் அதிர்வெடிச் சத்தம் ஒன்று கேட்டதாக இப்பகுதியில் வாழும் மக்கள் கூறினுர்கள். பின்னர் விநாயகர் சிலையொன்று மெதுவாகப் பூமியிலிருந்து வெளிவருவதைச் சிலர் கண்டதாகவும் கூறினுர்கள். ஆனல் இச்சிலையை வேண்டுமென்றே இப்பகுதியில் யாரோ கொண்டுவந்து வைத்திருக்கக்கூடும் என்று பொலிசாருக்குத் தகவல் கிடைத்திருப்பதாகத் தெரிகின்றது. இப்பகுதியில் வேருெரு மதத்தைச் சேர்ந்தவர்களுக்கு அவர்களின் புனித ஸ்தலமொன்றை அமைத்துக் கொள்வதற்கு இந்த இடம் ஒதுக்கப்பட்டிருந்தது. இதனைத் தடுப்பதற்கே இந்த விநாயகர் சிலையை அங்கு யாரோ வேண்டுமென்றே வைத்திருக்கலாம் என்று அரசினர் கருதுகிருர்கள்.

இச்சிறிய தொழிற்சாலைக்கு 3 கோடியே 72 லட்சம் ரூபா முதலீடுசெய்யப்படும்: வருடத்திற்கு 50 ஆயிரம் [illegible] உற்பத்தி செய்யப்படும் முழுக்கமுழுக்க உள்நாட்டுப் பொருட்களாலேயே இக்கார்கள் தயாரிக்கப்படும் 6 பேர் பிரயாணம் செய்யக்கூடிய இக்காரின் விலை ரூபா 6 ஆயிரம் விசேஷ வசதிகள் செய்யப்பட்டது 9 ஆயிரம்.

இத்திட்டத்திற்கான அனுமதி வழங்கப்பட்டதும் தொழிற்சாலையை அமைப்பார்.

# 'ஓய்வு நேரத்தை

## நல்வழியில் கழியுங்கள்'

முசலி, சனி

'இப்பகுதி மக்கள் பெரும் பாலானேர் விவசாயிகள் அவர்கள் விவசாயத்தில் ஈடுபடும் நேரம் தவிர்ந்த ஓய்வு நேரத்தை பெரும் பாலானமக்கள்மது அருந்தல் சூதாடல் போனறவற்றில் துர்ப்பிரயோகம் செய்கின்ருர்கள் இதனல் அவர்கள் தங்கள் சமுதாயத்தில் தாங்கள் கூடாதவர்கள் என்ற பெயர் எடுப்பதுடன் தங்களையும் அழித்துதங்கள் வாழ்க்கையையும் குடும்ப கௌரவத்தையும் நாசமாக்குகின்ருர்கள்.

இப்படியான விளையாட்டு விழாக்களில் பங்கு கொள்வதன்மூலம் ஒய்வு நேரத்தைப் பயன் படுத்தினல் தீயவழி செல்ல நேரமிருக்காது. மனமும் வராது' என்று மாந்தைக் காரியாதிகாரி பிரிவினல் நடாத்தப்பட்டவிளையாட்டுபோட்டியின் பரிசளிப்பு விழாவின்போது மன்னர் மாவட்ட அரசாங்க அதிபர் திரு. சங்கரப்பிள்ளை கதிர்காமநாதன் கூறினுர் இவ்விழாவின் போது மென் பந்தாட்டம், கரபந்தாட்டம் உதைபந்தாட்டம் ஆகிய இறுதி விளையாட்டுகள் இடம்பெற்றன இவ் விளையாட்டு விழா அடம்பன் சென் மேரிஸ் மாவித்தியாலயத்தில் நடைபெற்றது மாந்தைக்காரியாதிகாரி திரு. முத்தையா சுப்பிரமணியம் தலைமை தாங்கினுர்.

# வெனிஸ் நகரில் சுழல் காற்று

## 30 பேர் பலி

வெனிஸ், செப். 12

இத்தாலியின் சரித்திரப் பிரசித்தி பெற்ற நகரமான வெனிசில் இன்று வீசிய சுழல் காற்றின் காரணமாக 30 பேர் மரணமடைந்தனர். சுழல் காற்றின் வேகத்திஞல் மேலும் 100 பேர்வரை காயமடைந்துள்ளனர்.

மோட்டார் படகொன்று வாவியில் தலைகீழாக கவழ்ந்ததாகவும் அறிவிக்கப்பட்டது.

வெனில் நகரத்தின் சிறப்பும் பழமையும் மிக்க மத்திய பகுதி சுழல் காற்றிஞல் எவ்வித பாதிப்புக்குமுள்ளாகவில்லை.

தமிழ்ப் பிரமுகர்கள் குழுவுடன் [illegible]துழைப்பதற்கு தமிழ்க் காங்கிரஸ் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

சில தினங்களுக்கு முன் னர் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திரு. ஜி. ஜி. பொன்னம்பல[illegible]ன் தலைமையில் நகர மண்[illegible]பத்தில் நடைபெற்ற தொரு மகாநாட்டில் புதிய அரசியல் அமைப்பில் சேர்க்கப்பட வேண்டுமெனக் கோரி தமிழ்க் காங்கிரஸ் சமர்ப்பிப்பதற்கெனத் தயாரிக்கப்பட்ட சிறுபான்மையினரின் அடிப்படை உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் அம்சங்கள் எடுத்து விளக்கிக் காட்டப்பட்டன. அங்கு கூடியிருந்த பலரும் அவற்றில் திருப்தி தெரி[illegible]தார்கள்

பல்கலைக்கழக முன்னுள் விரிவுரையாளர் திரு. கே. நேசையாவின் முயற்சியால் அமைக்கப்பட்ட தமிழ்ப் பிரமுகர்கள் குழு தயாரித்துள்ள மகஜருடன் தமிழ்க் காங்கிரஸ் தயாரித்துள்ள அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதமளிக்கும் அம்சங்களையும் சேர்த்து அனுப்புவதென முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இம்மாதம் 15-ம் திகதி யாழ் நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு அழைப்பு அனுப்பப்பட்டவர்களே அனுமதிக்கப்படுவார்களாம். நூறு பேர் மட்டும் கலந்து கொள்ளும் இக்கூட்டத்தில் இந்த நூறுபேரும் கையொப்பமிட்டு மகஜர் அனுப்பப்படுமாம்.

# தேசிய சுவீப் முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

நேற்று இழுக்கப்பட்ட 315 வது இலக்க தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

**1-வது பரிசு**

13 V 0644 ரூ. 94,360

**2-வது பரிசு**

14 C 0499 ரூ. 37,744

**3-வது பரிசு**

39 O 0223 ரூ. 9,436

தலா ரூ. 471 80 சதம் பெறும் 100 டிக்கட்டுகள்வருமாறு:-

| | |
|---|---|
| 11 T 0576 | 21 H 0425 |
| 07 C 0271 | 05 W 0649 |
| 08 V 0066 | 18 S 0019 |
| 30 F 0328 | 33 W 0174 |
| 28 E 0183 | 07 V 0548 |
| 15 Q 0820 | 39 B 0398 |
| 35 O 0966 | 10 B 0849 |
| 35 X 0292 | 12 X 1000 |
| 12 B 0716 | 17 P 0217 |
| 23 F 0489 | 05 W 0121 |
| 20 T 0295 | 16 C 0057 |
| 14 S 0757 | 14 O 0855 |
| 20 R 0042 | 36 P 0079 |
| 18 R 0060 | 32 R 0506 |
| 16 H 0058 | 12 W 0588 |
| 11 N 0387 | 02 K 0293 |
| 31 L 0324 | 18 S 0285 |
| 16 H 0045 | 16 K 0780 |
| 07 Y 0004 | 38 C 0370 |
| 30 V 0963 | 31 A 0277 |
| 35 Q 0925 | 20 B 0177 |
| 04 Q 0049 | 38 Q 0346 |
| 32 L 0744 | 21 U 0824 |
| 13 B 0994 | 10 W 0240 |
| 04 Q 0410 | 35 P 0781 |
| 05 Q 0750 | 20 P 0484 |
| 33 B 0480 | 20 M 0039 |
| 07 G 0875 | 38 X 0524 |
| 13 T 0076 | 27 H 0453 |
| 28 S 0299 | 02 R 0555 |
| 31 C 0271 | 03 K 0512 |
| 29 J 0186 | 37 P 0528 |
| 19 O 0099 | 14 C 0090 |
| 14 Z 0802 | 23 W 0632 |
| 28 W 0045 | 24 W 0935 |
| 26 L 0825 | 27 P 0080 |
| 17 Z 0575 | 21 J 0343 |
| 07 G 0066 | 33 C 0122 |
| 34 Q 0408 | 06 R 0837 |
| 21 O 0979 | 14 W 0333 |
| 16 F 0959 | 37 W 0474 |
| 34 V 0040 | 37 A 0372 |
| 06 F 0837 | 30 X 0228 |

(4-ம் பக்கம் பார்க்க)

# மாநில சுயாட்சி மாநாடு கோலாகலமாக ஆரம்பம்

சென்னை, செப். 12

மாநில சுயாட்சி மகாநாடு இன்று இங்கு கோலாகலமாக ஆரம்பமாகியது.

இன்று காலை சுமார் 10-30 மணிக்கு பிரமாண்டமான ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் கலந்து கொண்டார்கள். அண்ணு சிலைக்கருகிலிருந்து ஆரம்பமான ஊர்வலம் மத்தியானம் வரைக்கும் ஜெமினி திருப்பத்தைக் கடக்கவில்லை.

ஊர்வலத்தின் முன் வரிசையில் அலங்கரிக்கப்பட்ட யானையொன்றின் மீது சுயாட்சிக் கொடியை ஏற்றிய வாலிபர் ஒருவர் வீற்றிருந்தார். அவருக்குப் பின்னல் தி. மு. கழகக் கொடிகளை ஏந்திய வாலிபர்கள் ஆறு குதிரைகளில் சவாரி செய்தார்கள்.

தமிழ்நாட்டின் பாரம்பரிய கிராமியக்கலை அம்சங்களான சிலம்பம், கரகம், பொய்க்கால் குதிரை ஆட்டம் போன்றவை ஊர்வலத்தில் இடம்பெற்றன.

ஊர்வலத்தின் மத்திய வெளி ராஜ்யங்களிலிருந்து வந்த தலைவர்களும் தமிழ்நாடு முதல்வர் திரு. மு. கருணுநிதி, மற்றும் தலைவர்களும் ஊர்திகளில்பவனி வந்தார்கள்.

# 'பிரேரணை ஏகமனதாக நிறைவேறியது உண்மை'

கொச்சிக்கடை, சனி

அகில இலங்கை பட்டினசங்கங்களின் சமாஜச் செயலாளர் திரு. டி. பி. சுமணசேகரா பின்வருமாறு எழுதுகிருர்.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைக்கு தமிழர் ஒருவரை அங்கத்தவராக நியமிக்க வேண்டுமெனக் கோரி பொலனறுவையில் நடைபெற்ற அகில இலங்கை பட்டின சங்ங்களின் சமாஜத்தின் ஐந்தாவதாண்டுக் கூட்டத்தில் காங்கேசன்துறைப் பட்டினசபைத் தலைவர் திரு. கே. ஜெயபாலசிங்கத்திஞல் கொண்டுவரப்பட்ட தீர்மானம் கொட்டிகாவத்தை பட்டினசபைத்தலைவர் திரு. பி. கே. கூறேயினுல் ஆமோதிக்கப்பட்டுஏகமனதாக நிறைவேறியது.

இதுதான் உண்மை. அந்தப் பிரேரணையை திரு. ஏ. ஹென்றி ஆமோதித்ததாசவும் அது கூட்டத்தில் நிறைவேறவில்லையென்றும் 'ஈழநாடு' பத்திரிகையில் வெளிவந்த செய்தி உண்மையல்ல. பிரேரணைமீது திரு. ஏ. ஹென்றி பேசினுர்

இதற்குக் காரணம் ஐக்கிய தேசியக் கட்சியும், தமிழரசுக் கட்சியும் தான். அக் காலத்தில் பரஸ்பர ஒற்றுமை நிலவவேயில்லை.

யாழ்ப்பாணத்தில் ஸ்ரீலணம்கோட்டை, நவீனமார்க்கட், லேடன் ஸ்தாபனம் ஆகியவற்றுக்கும் சென்று பார்வையிட்டார். பலத்த பொலிஸ்பாதுகாப்பும்அளிக்கப்பட்டிருந்தது. (கு வி ம)

வரவு செலவு

# இடைக்கால அறிக்கை நிறைவேறியது

கோட்டை, சனி

நிதி அமைச்சரினுல் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால வரவுசெலவுத் திட்டம் இன்று ஆட்சி மன்றத்தில் நிறைவேறியது.

அரசாங்கத்தின் திட்டங்கள் பற்றி திட்டவட்டமாகத் தெரிந்து கொள்ள முடியாமலிருப்பதால்பொது மக்கள் பெரிதும் அவதியுறுவதாக எதிர்க்கட்சியினர் குற்றஞ் சாட்டினர். சிம்மாசனப் பிரசங்கத்தில் அரசாங்கத்தின் கொள்கைகள் பற்றி தெரிவிக்கப்பட்டதாகவும் அதுவே அரசாங்கத்தின் கொள்கை என்றும் இது நடைமுறைப் படுத்துவது பற்றி வரவு செலவுத்திட்ட அறிக்கை வெளியானதும் தெரியவரும் என்றும் டாக்டர் என் எம் பெரேரா இதற்குப் பதிலளித்த போது தெரிவித்தார்.

எதிர்க் கட்சித் தலைவர் திரு ஜே ஆர் ஜெயவர்த்தன பேசுகையில், அரசாங்கம் பதவியேற்ற மூன்றரைமாத குறுகிய காலத்துக்குள் பெரும் பிரச்னைகளுக்கு தீர்வு காணமுடியாது என்பதைத் தாம் ஒப்புக்கொள்ளுவதாகத் தெரிவித்தார்.

தீவுப்பகுதி எம் பி பண்டிதர் கா பொ இரத்தினம் பேசுகையில் ஆசிரியர் இடமாற்றம் மனிதாபிமானத்துடன் செயற்படுத்தப்பட வேண்டும் என்ருர்.

தோட்டங்களுக்குள் தொழிற் சங்கப் பிரதிநிதிகள் சென்று விசாரணை செய்ய அனுமதியளிக்கும் சட்டமும் நிறைவேற்றப்பட்டது.

## இயற்கையான சுரங்கமல்ல

# 'புவியியல் மாற்றத்தால் ஏற்பட்ட அகழ்வே!'

## புதைபொருள் ஆராய்ச்சியாளர் தரும் விளக்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கீரிமலைப் பகுதியில் எல்லோரையும் பரபரப்பில் ஆழ்த்தியுள்ள அகழ்வு புவியியல் மாற்றத்தால் ஏற்பட்ட ஒன்றே என வட பிராந்திய புதைபொருள் ஆராய்ச்சிப் பகுதி பொறுப்பாளர் திரு. அ. கந்தையா தெரிவித்தார்.

அவர் இதுபற்றி மேலும் தெரிவித்ததாவது:

வலி வடக்கு காரியாதிகாரி திரு. பற்றிக்சின் வேண்டுகோளின்படி கீரிமலைஅகழ்வை நேற்று மாலை சென்று பார்த்தேன் அதில் சரித்திர சம்பந்தம் இருப்பதாகக் கருத முடியவில்லை சுண்ணுகம்புக் கற்பாறை உள்ள வடபகுதியில்இவ்வித நிலைகள் பல உண்டு மந்துவில் புத்தூர் கெருடாவில் போன்றஇடங்களில்இவ்வித நிலைகள் காணப்படுகின்றன நிலாவரையில் உள்ள நீரூற்றும் இதுபோன்ற அம்சம் பொருந்தியதே. கீரிமலையில் இருந்து பருத்தித்துறை ஈருக இவ்வித நிலைகள் பல காணப்படுகின்றன கெருடாவிலில் உள்ள பெரிய மாளிகை சின்ன மாளிகையும் இதுபோன்றனவேஎனக் கருதக்கூடியதாகஇருக்கிறது

கீரிமலையில் உள்ள இவ்வகழ்வை பலமாணவர்களும் பொதுமக்களும் பார்த்து வருகின்றனர். சுகாதாரத்துக்குப் பொருந்தாத இவ்விடத்தில் அபாயம் நிறைந்துள்ளது. எனவே இவற்றில் இருந்து அவர்களைப் பாதுகாக்குமாறு பொலிசாரைக் கேட்டுள்ளார்.

மேலும் நில நீர் ஆராய்ச்சிப்பகுதியும் தொல்பொருள் ஆராய்ச்சிப்பகுதியும் இதுபற்றி ஆராய வேண்டுமென சிபார்சு செய்து சம்பந்தப்பட்டவர்களுக்குக் கடிதம் அனுப்பியுள்ளார். (கு வி ம)

### நிதி அமைச்சர் பயணம்

கொழும்பு, சனி

நிதி மந்திரி என் எம் பெரேரா சாம்பிராஜ்ய நிதி மந்திரிகள் மகாநாட்டில் கலந்து கொள்ளுவதற்காக இன்று நிக்கோஷியாவுக்குச் செல்கிறர், இவருடன் திறைசேரி அதிகாரி திரு. இராஜேந்திராவும் செல்கின்ருர்.

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு

டாலர் அலுமினியம்

ONE-DOLLAR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

கம்மாலை வேலையாட்கள்

கம்மாலையில் உலைமுக இரும்புவேலைகள் செய்யக்கூடிய அனுபவமிக்க வேலையாட்கள் தேவை. உடனே விண்ணப்பிக்கவும். அல்லது நேரில் வரவும் மனேஜர், ஸ்ரார் எலெக்ரிக்கல் வெல்டேர், வெலிங்டன் சந்தி யாழ்ப்பாணம். 2940

இந்து மணமகள் தேவை. கலியாணம் பதியவேணும் விபரம்: றிசிஸ்ரர் ம. இரத்தினவேலு, மாகாண ஏசண்டு, தும்பளை வீதி, பருத்தித்துறை. 2944

### கல்வி

பெண்மணிகளுக்கு:

எண் கணிதம், தூய கணிதம், இரசாயனம், பௌதிகமாகிய பாடங்கள் பெண்களுக்கு மட்டும் விஞ்ஞான பட்டதாரிப் பெண்மணியினுல் (G. G. E. o, L) பரீட்சைக்குக் கற்பிக்கப்படும். விபரங்களுக்கு: 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 2941

### விற்பனைக்கு

காணி:

மண்டைதீவு அம்மன் கோவில் சந்தியில் 30 வரப்பு நல்ல விளைச்சல் உள்ள நெற்காணி விற்பனைக்கு உண்டு. V. P. சண்முகநாதன், 3, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 2942

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 13—9—70

344 மீ அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 நிலைய ஒலிப்பதிவுகள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 விவசாய நிகழ்ச்சி, 7-00 திரைகானம், 7-15 வயலின், 7-45 நேயர்கடிதங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-40 பாட்டு, 10-30 செய்தித்தொகுப்பு.

### கண்டெடுக்கப்பட்டது

உழவு யந்திரக் கலப்பை ஒன்று இன்று காலை 7 மணியளவில் பண்ணை தபால்கந்தோர் வீதியில் கண்டு எடுத்துள்ளோம். அதன் சொந்தக்காரர் 35/2, இலக்க சிவன்பண்ணைவீதி, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்தாருடன் தொடர்புகொள்ளவும். 2943


ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — சௌகார் ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த

இரு கோடுகள்

2வது வெற்றி வாரம்

ராஜா - யாழ்ப்பாணம்

10-30, 2-30, 6-30, 9-45

பிரேம் நசீர், செம்மீன் ஷீலா, சாரதா, மது மற்றும் பலர் நடித்த

இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசு பெற்ற

துலாபாரம்

(மலையாளம்)

(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

யாழ் - வின்ஸர் திரையில்


## கேள்வி விளம்பரம்

1. தம்பிராய் - அத்தாய் றோட்டு.
2. மகாவித்தியாலயம் றோட்டு.
3. கடை அறைகளின் குறை வேலை.

குறித்த மூன்று வேலைகளுக்கும் கேள்விகள் அழைக்கப்படுகின்றன. கேள்விப் பணமாக ரூபா இருபதும் (20/-) பத்திரப்பணமாக ரூபா ஐந்தும் (5/-) ஒவ்வொரு வேலைகளுக்கும் தனித்தனி கட்டிப் பற்றுச்சீட்டுப் பெற்றுக்கொண்ட உத்தியோகபூர்வமான பத்திரத்திலேயே கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் 26-9-70ஆம் திகதி பிற்பகல் 4 மணி வரை இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 28-9-70ஆம் திகதி காலை 10-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் தலைவர், கிராமசபை, பூநகரி என்னும் விலாசத்திற்குப் பதிவுத்தபால் மூலம் அனுப்பவேண்டும். அதே நேரத்தில் அதன் பிரதி ஒன்று யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அவர்கட்கும் அனுப்புதல் வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் பெயர் குறிப்பிடவேண்டும்.

மேலதிக விபரங்களை கிராமசபைக் கந்தோரில் அல்லது யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அறிந்துகொள்ளலாம்.

வை. வல்லிபுரம்,
அக்கிராசனர்,
கிராமசபை,
2446 பூநகரி.

மன்னூர்ப் பகுதி

## தாச்சி சாம்பியன்

அடம்பன், சனி

மன்னார் காரியாதிகாரிபகுதியில் நடந்த தாச்சி விளையாட்டுச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டம் மன்னார் முற்றவெளியில் நடந்தது. இதில் எள்ளுப்பிட்டி மாந்தைமாதா சன சமூக நிலையக் கோஷ்டியினரும் பெரியநாவற்குளம் பாலகயேசு சன சமூக நிலையத்தினரும் போட்டியிட்டனர். எள்ளுப்பிட்டிக் கோஷ்டியினர் 11 பழங்களையும் நாவற்குளம் 9 பழங்களையும் பெற்று எள்ளுப்பிட்டிக் கோஷ்டி மன்னார் பகுதிச் சாம்பியனானது. இவர்கள் சென்ற முறை மன்னார் மாவட்டம்,

# நாளை 'மின் ஒளியில்' கூடைப்பந்தாட்டம்

# இறுதி ஆட்டங்களில் கொழும்புக் கோஷ்டிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ் பொலிஸ் விளையாட்டு வாரவிழாவை முன்னிட்டு ஈழநாடு ஆதரவில் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் அனைத்தும் தற்போது யாழ் மத்திய கல்லூரியில் வெவ்வேறு விளையாட்டுத் திடல்களில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

கரபந்தாட்டம் ஆரம்பமாகி தற்போது முடிவடையும் கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கின்றது. இப்போட்டியை திரு ஈ. கே. குமரையா மிகத் திறம்பட நிர்வகித்து வருகின்றார். கரபந்தாட்டப் போட்டிகளின் இறுதியாட்டம் இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும்.

வலைப்பந்தாட்டம் நேற்று முன்தினம் ஆரம்பமாகிவிட்டது. யாழ் மாவட்டத்திலுள்ள பல மகளிர் கல்லூரிகள் இப்போட்டியில் கலந்துள்ளன. முன்னர் திட்டமிட்டபடி இந்தப் போட்டி மின்னொளியில் நடைபெறவிருந்தது. ஆனால் எதிர்பாராத சில இடையூறுகள் காரணமாக இப் போட்டி மின்ஒளியில் நடாத்த முடியாமைக்கு வருந்துகிறோம்.

கூடைப்பந்தாட்டம் நாளை ஆரம்பமாகின்றது. இப்போட்டிகள் அனைத்தும் 'மின் ஒளியில் நடைபெறும்.

இந்தப் போட்டியில் மொத்தம் எட்டுக்கோஷ்டிகள் கலந்து கொள்கின்றன. எட்டுக்கோஷ்டிகளும் இரு பிரிவாகப் பிரித்து போட்டிகள் நடாத்தப்படுகின்றன. காலையும், மாலையும் போட்டிகள் நடைபெறும்.

'ஏ' பிரிவு: பற்றிசியன் 'கோல்' சென்றலைஸ் 'புளு' கோப்பாய் விளையாட்டுக்கழகம், மகா மெமோறியல்.

'பி' பிரிவு: பற்றிசியன் 'கிறீறு' சென்றலைஸ் 'சொக்லற்ஸ்' ஓல்கோல்ஸ் கடற்படை.

கூடைப்பந்தாட்டப் போட்டியின் விளையாட்டு அட்டவணை பின்வருமாறு:

**14-9-70**

7 மு.ப: மகாமெமோறியல் பற்றிசியன்ஸ் 'ஏ'

6 பி.ப: பற்றிசியன் 'ஏ' — சென்றலைஸ் 'பி'

6 பி.ப: மகாமெமோறியல் — சென்றலைஸ் 'பி'

7 பி.ப: பற்றிசியன் 'ஏ'- கோப்பாய் வி. க.

**16-9-70**

7 மு.ப: பற்றிசியன் 'பி' — சென்றலைஸ் 'ஏ'

6 பி.ப: கடற்படை — சென்றலைஸ் 'ஏ'

7 பி.ப பற்றிசியன் 'பி' — ஓல்கோல்ஸ்.

**17-9-70**

7. மு. ப. ஓல்கோல்ஸ் — கடற்படை.

6. பி. ப. சென்றலய்ஸ் — ஓல்கொல்ஸ்.

7. பி. ப. பற்றிசியன்ஸ் 'பி' — கடற்படை.

**18-9-70**

6. பி. ப. இறுதியாட்டம் வின்னஸ் 'ஏ, வின்னஸ் 'பி'

கூடைப் பந்தாட்டத்தின் இறுதியாட்டம் இம்மாதம் 18ம் திகதி நடைபெறும் போது அன்றைய தினம் கொழும்பிலிருந்து பிரத்தியேகமாக வரவழைக்கப்படவிருக்கும் இரு பிரபல்யமான கூடைப்பந்தாட்டக் கோஷ்டிகளின் கண்காட்சிப் போட்டியும், இக்கோஷ்டிகளுடன் யாழ் தெரிவுக் கோஷ்டியும் மோதும், கண்காட்சிப் போட்டியும் நடைபெறும்.

இப்போட்டிக்கான சகல ஏற்பாடுகளையும் வடமாகாண கூடைப்பந்தாட்டச் சங்கக் காரியதரிசி திரு. ஏ. பாலசிங்கம் செய்துள்ளார்.

### உதைபந்தாட்டம்

பொலிஸ்விளையாட்டு வாரவிழாவை முன்னிட்டு அகில இலங்கை பொலிஸ் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் யாழ்ப்பாண தலைவர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் இம்மாதம் 16-ந் திகதி ஒரு 'கண்காட்சி' உதைபந்தாட்டப்போட்டி நடைபெறும். இப்போட்டி யாழ் விளையாட்டரங்கில் நடைபெறவிருக்கின்றது. இப்போட்டியில் மோதுவதற்காக தற்போது யாழ்ப்பாண தலைவர் தெரிவுக்கோஷ்டி திரு சற் சிங்கராயரின் தலைமையின் கீழ் கடும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றது.

இந்த விளையாட்டு விழாவுக்கு யாழ் நகரில் உள்ள பல பிரமுகர்கள் பரிசளிக்க முன்வந்துள்ளார்கள் இவர்களின் விபரம் வருமாறு:

மில்க்வைற் ஸ்தாபனம், 'அண்ணா' கோப்பி ஸ்தாபனம், பிள்ளையார்விலாஸ் கே. கே. எஸ். றோட், டாக்டர் ஏப்ரகாம், டாக்டர் பிலிப்.

உதைபந்தாட்டம்

## பற்றிக்ஸ் — மன்னார் நாளை மோதுகின்றன

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டி நாளை மன்னார் சென். சேவியர் கல்லூரியின் உதைபந்தாட்டக் கோஷ்டியுடன் மோதுகின்றது.

மன்னாரில் பலம் கொண்ட உதைபந்தாட்டக் கோஷ்டி எனக் கருதப்படும் சென் சேவியர் கோஷ்டியில் சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சென்ற வருடம் தோல்வியடையாது எல்லாப் போட்டிகளிலும் வெற்றி பெற்று, சாம்பியனாகத் திகழ்ந்தது குறிப்பிடத்தக்கது. இக்கோஷ்டியில், சென்ற வருடம் இலங்கை இளைஞர் தெரிவு உதைபந்தாட்டக் கோஷ்டியுடன், மணிலா சென்று திரும்பிய வீரர்களான பிரான்ஸிஸ், கொன்ஸலஸ் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர்.

இப் போட்டி நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (தே. நி)

## கரபந்தாட்டப் போட்டியில் கே.கே.எஸ். வெளியேறியது

'ஈழநாடு' ஆதரவில் நடைபெற்றுவரும் கரபந்தாட்ட 'செட்-அப்' போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக்கழகமும் இராணுவக் கோஷ்டியும் ஓவர்… கேம் போட்டியில் நீர்வேலி யுனைட்டெட் 'பி கோஷ்டியும் நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழகமும் இறுதிப் போட்டியில் கலந்துகொள்வதற்கு தகுதிபெற்றுள்ளன.

நேற்று முன்தினம் யாழ் மத்திய கல்லூரி கரபந்தாட்டத்திடலில் நடைபெற்ற 'செப்-அப்' அரை இறுதிப் போட்டியில் வல்வெட்டித்துறை விளையாட்டுக் கழகம் யாழ் பொலிஸ் கோஷ்டியை 2…1 ஆட்டத்தால் வெற்றி பெற்றது

### கே. கே. எஸ் வெளிநடப்பு

இராணுவக் கோஷ்டிக்கும் கே. கே. எஸ், யுனைட்டட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு செட்- அப் போட்டியில் கே. கே. எஸ். கோஷ்டி மத்தியஸ்தரின் தீர்ப்பை ஆட்சேபித்து மைதானத்தைவிட்டு இடையில் வெளியேறியது. இதனுல் இராணுவக் கோஷ்டிக்கே வெற்றியென மத்தியஸ்தர் தீர்ப்பளித்தார்.

போட்டியின் போது மத்தியஸ்தரின் தீர்ப்பே இறுதியான முடிவு என்றும், மத்தியஸ்தரை ஆட்சேபிப்பதானுல் போட்டியின் முன்போ அல்லது போட்டியின் முடிவிலோ தான் போட்டியின் நிர்வாகக்குழுவினருக்கு ஆட்சேபத்தை தெரிவிக்கவேண்டும் என்றும் ஆனுல் இவைகளை முன்னேடியாகச் செய்யாமல் போட்டியின்போது இடையில் மைதானத்தைவிட்டு வெளியேறுவது அநாகரிகமான ஒரு செயலாகும் என இப்போட்டிகளின் பொறுப்பாளர் திரு ஈ கே. குமரையா எமது நிருபரிடம் தெரிவித்தார்.

(தே' நி)

## பெ. ஆ. சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் பாரதி பாஷிய பாடசாலைப் பெற்றார் - ஆசிரியர் சங்கக் கூட்டம் பாடசாலை மண்டபத்தில் தலைமை ஆசிரியர் திரு. சு. இராசையா தலைமையில் நடைபெற்றது. பெற்றூர் - ஆசிரிய சங்கத்தின் நோக்கம்பற்றி ஆசிரியர் திரு. க. சிற்றம்பலம் பேசினுர்.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்:

தலைவர்: திரு. சு. இராசையா, உபதலைவர்: திரு. ஜெ. செந்தில்ராசா, காரியதரிசி: திரு க. சிற்றம்பலம், உபகாரியதரிசி: திரு. ஏ. எல். எம். அப்துல் ஹலீம். தனதிகாரி: திரு. வி. சபாரத்தினம். நிர்வாக சபை உறுப்பினர்கள் திருவாளர்கள் து. சிவசுப்பிரமணியம், ஜெ. மகாதேவா, த. சிவசுப்பிரமணியம், ரி. ஜே ஆப்தீன், எம். சுப்பிரமணியம், ஆப்பாஸ்பாய் ஹெசன் அலி.

## கி. மு. சங்க பிரதிநிதிகளுக்கு வகுப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த கிராம முன்னேற்றச் சங்கப் பிரதிநிதிகளுக்குப் பயிற்சி வகுப்பொன்று இம்மாதம் 10ந் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணம் அச்சுவேலியில் இருக்கும் பாடசாலையில் இவ்வகுப்பு தொடர்ச்சியாக 10 நாட்கள் நடக்கும். இவ்வகுப்பில் கிராம முன்னேற்றங்கள் சம்பந்தமான விரிவுரைகள் நடைபெற்று வருகின்றன.

இந்த வகுப்பைத் திறம்பட நடாத்த, வடமாகாண கிராம முன்னேற்றப் பாடசாலைப் பொறுப்பதிகாரி திரு. இ. திருநாவுக்கரசு ஆக்கவேலைகளைச் செய்துகொண்டிருக்கிறார்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

(மலையாளம்)
(எஸ். ரி. ஆர். பிலிம்ஸ்)

யாழ்-வின்ஸர் திரையில்
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன், ஜெய்சங்கர்,
ராஜஸ்ரீ, நிர்மலா
நடித்த
பூவா தலையா

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெலிங்டன் யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்தவள்
—விஜயா

அவள் கதை மட்டுமல்ல 'துலாபாரம்' உள்ளத்தை உருக்கும் ஒரு கண்ணீர் காவியம். உணர்ச்சி ஓவியம்..............வாழ்க்கைப் பாதையில் அவள் சந்தித்தது சாதாரண மேடு பள்ளங்களல்ல! சமுதாயத்தையே திணறவைத்துக் கொண்டிருக்கும் மாபெரும் பிரச்னைகள் அவை ... அவைகளுக்கு முடிவு தேடினள்...அவள் எடுத்த முடிவு சரியா? தீர்ப்புக் கூறுங்கள் நீங்கள்......
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்



துலாபாரம்
(தமிழ்)
★ ஏ வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

னுப்பிட்டிக் கோஷ்டியினர் 11 பழங்களையும் நாவற்குழி 9 பழங்களையும் பெற்று என்னுப்பிட்டிக் கோஷ்டி மன்னார் பகுதிச் சாம்பியனாகியது. இவர்கள் சென்ற முறை மன்னார் மாவட்டம், வவனியா, பூனகரி ஆகிய இடங்களுடன் போட்டியிட்டு முதலாம் இடத்தைப் பெற்றுச் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக்கொண்டதுடன் யாழ்ப்பாணத்தில் இரண்டாம் இடத்தையும் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தகுந்தது.

## வேதனம் பற்றி ஒரு வேண்டுகோள்

ஆனையிறவு, சனி

எந்தமாதம் பார்த்தாலும் தமது வேதனம் ஒழுங்கற்ற முறையில் கொடுக்கப்பட்டு வருவதாகவும், எனவே இனி வரும் மாதங்களிலாகுதல் தமது வேதனத்தை ஒழுங்கான முறையிலும் நேரத்தைச் சுணக்காதவகையிலும் கொடுத்துதவும்படி சம்பந்தப்பட்ட பொறுப்பதிகாரியிடம் ஆனையிறவு குறிஞ்சாதீவு பகுதி உப்பள ஊழியர் கேட்டுள்ளனராம்

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
நாகேஷ் — கே. ஆர். விஜயா
நடித்த
சர்வர் சுந்தரம்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
சிவாஜி — ஜமுனா
நடித்த
மருதநாட்டுவீரன்

MANOHARA
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p.m.
Lloyd Bridges,
Joan Blackman
in
DARING GAME
[Color]

REGAL
Jaffna
Daily: 4-45, 7 & 9-45 p.m.
Kirk Douglas,
James Mason
in
20,000 LEAGUES
UNDER THE SEA

அட்டவணை பின்வருமாறு:

**14-9-70**

7 மு.ப: மகாமெமோறியல் பற்றிசியஸ் 'ஏ'
... பி.ப: பற்றிசியன் 'ஏ' ... சென்றலைஸ் 'பி'
7 பி.ப: மகாமெமோறியல் — கோப்பாய் வி. க.

**15-9-70**

7 மு.ப: சென்றலைஸ் 'பி' — கோப்பாய் வி. க.

## இன்றைய பலன்

ஆவணி மாதம் 28 ம் திகதி
(13-9-70)

மேஷம்: ஆராய்ச்சிகளில் அதிக ஆர்வம் தோன்றும். வியாபார முன்னேற்றமும் தோன்றக்கூடும். நல்லநாள்.

ரிஷபம்: புத்திக்கூர்மையுடன் புதிய எண்ணங்களும் தலைதூக்கும் இறை நம்பிக்கையுடன் இல்லத்தில் அமைதி தவழும்.

மிதுனம்: நீண்ட நாள் உறவில் முறிவு ஏற்படும். சமயோசித புத்தியினுல் எதையும் சமாளிக்கலாம்.

கடகம்: இல்லத்தில் இன்று இனிமையான சம்பவங்கள் இடம்பெறும், சிலர் வாழ்க்கையில் அதிஷ்டலாபங்களுக்கும் இடம் உண்டு

சிம்மம்: செய்தொழிலில் தளர்ச்சி ஏற்படும், பிரயாணத்தை தவிர்க்கவும். இறை நம்பிக்கை நன்று.

கன்னி: பூமியால் லாபமுண்டு. புத்திரர் புகழும் சேரும். உடல்நலம் பாதிக்கப்படக்கூடும்,

துலாம்: வணிகர்கள் இன்று அதிக முதலீட்டைத் தவிர்த்துக்கொள்ளவும், நிதானம் வேண்டும்.

விருச்சிகம்: பொருள் வரவில் புதிய திருப்பம் ஏற்படும் வெளியூரில் இருந்து செய்தியொன்று கிடைக்கலாம்.

தனுசு: அதிக சிந்தனை சிறிய தலையிடியைக் கொடுக்கும், அசிக கட்டுப்பாடு அவசியம் தேவை.

மகரம்: எக்கருமத்தையும் எண்ணித் துணியுங்கள், அவசரப் போக்கினுல் அருமையான சந்தப்பத்தை கோட்டைவிடக்கூடும்,

கும்பம்: கனிவான நினைவுகளில் மூழ்கிப்போவீர்கள். உங்களுக்கு உதவ மற்றவர்கள் முன்வருவார்கள்.

மீனம் அமைதிக்குப் பங்கம் ஏற்படும், சம்பவங்கள் இடம் பெறலாம், வைத்தியச் செலவுக்குஇடம் உண்டு. நிதானம் வேண்டும்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

சிறந்த உதைபந்தாட்ட வீரர்கள் அங்கம் வகிப்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி சென்ற ... ன்றனர்.

இப்போட்டி நாளை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும். (தே.பி)

... மணியம், ஜெ. மகாதேவா, த. சிவசுப்பிரமணியம், ரி. ஜெ. ஆப்தீன், எம். சுப்பிரமணியம், ... ஹைசன் அலி.

... திரு. இ. திருநாவுக்கரசு ஆக்கவேலைகளைச் செய்து கொண்டிருக்கிறார்.

# ★ ஆனையிறவுத்தடைக் கம்பத்தில் மோட்டார்சைக்கிள் மோதியது

## பலத்தகாயங்களுடன் இருவர் ஆஸ்பத்திரியில்


மட்டுவில், வெள்ளி

மோட்டார் சைக்கிளில் காலியிலிருந்து யாழ்ப்பாணம் வந்த இரு வியாபாரப் பிரமுகர்கள், ஊர் திரும்பும்போது, ஆனையிறவு முகாம் தடைக்கம்பத்தில் மோதுண்டு விபத்திற்குள்ளாகினர். ஆனையிறவு தடுப்பு முகாம் பொலிசாரின் முயற்சியால் அவர்கள் காயங்களுடன் உயிர் தப்பினர். இது பற்றிக் கூறப்படுவதாவது.

காலியிலுள்ள பிரபல இரத்தினக் கல் வியாபாரியான ஜனுப் நூர் என்பவரும் அவருடைய நண்பர் விமால் என்பவரும் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணத்திற்கு உல்லாசப் பிரயாணம் வந்திருந்தனர். இவர்கள், காலி திரும்புகையில் காலை சுமார் 8-30 மணியளவில் ஆனையிறவு தடுப்பு முகாமிலுள்ள தடைக்கம்பத்தில் மோட்டார் சைக்கிள் மோதியதைத் தொடர்ந்து விபத்துக்குள்ளாயினர்.

பலத்த காயங்களுக்குள்ளான இவ்விருவரையும், ஆனையிறவு தடுப்பு முகாம் பொலிசார் முதலுதவி கொடுத்து அவசரமாக கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைத்தனர். கிளிநொச்சி ஆஸ்பத்திரியிலிருந்து இவர்கள் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரிக்கு அம்புலன்ஸ் மூலம் அனுப்பிவைக்கப்பட்டனர்

வலைக்கிடமான நிலையிலிருந்த இவ்விருவரும் இப்பொழுது குணமடைந்துவருகிறார்கள், வீதிக்குக்குறுக்கே தடையாகப் போடப்பட்டிருக்கும் கம்பத்திற்கு துலக்கமான மை பூசப்படாததன் காரணமாக, அவர்களுக்கு, அக்கம்பம் சரியாகத் தெரியாது போய்விட்டதென்றும் இதுவே விபத்திற்குக்காரணமென்றும் கூறப்படுகிறது.



## ★ புதிய ஜே. பி.

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் மருதடி வீதியைச் சேர்ந்த திரு. அப்பாப்பிள்ளை சிவயோகநாதன் யாழ். மாவட்ட சமாதான நீதிபதியாக இன்று பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

ஒய்வு பெற்ற 2-ம் வகுப்பு தபால் அதிபரான இவர் சமுக சேவையில் ஈடுபாடுடையவர். யாழ். பரியோவான் கல்லூரி, யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி என்பவற்றின் பழைய மாணவரான இவர் மருதடி வீதி இளஞ்சிங்க சனசமூக நிலைய அமைப்பாளருமாவர். இவர் ஒரு விளையாட்டு வீரருமாவர்.

ஆசிரியப் பதவிக்கு விண்ணப்பங்கள்

# ★ நற்சான்றுப்பத்திரத்தில் அரசியல் பாகுபாடு?

## கிராமசேவையாளர்மீது அரசாங்க அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், சனி

ஆசிரியர்பதவிகளுக்குவிண்ணப்பிப்பதற்காக கிராமசேவையாளரால் வழங்கப்படும் நற்சான்றுப் பத்திரத்தில் அரசியல் பாகுபாடுகாட்டப்பட்டுவருவதாக பலத்த புகார்தெரிவிக்கப்பட்டுள்ளது இதுசம்பந்தமாக யாழ். மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

தீவுப்பகுதியைச் சேர்ந்த ஒரு கிராமசேவையாளர் அரசியல் கட்சி பாகுபாடு காரணத்தினுல் நற்சான்றுப் பத்திரத்தில் ஒழுக்கம் என்ற பகுதியைநிரப்ப மறுத்ததாகவும், ஒழுக்கம என்ற பகுதி நிரப்பப்படாமல் வழங்கப்பட்டபத்திரத்தில் மேலொப்பமிட தீவுப்பகுதி காரியாதிகாரி மறுத்ததாகவும் அரசாங்க அதிபரிடம் செய்து கொள்ளப்பட்டுள்ள புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு நிபந்தனையை நிறைவேற்றினுல் மட்டும் ஒழுக்கம்என்ற இடத்தில் நன்று என்று எழுதித்தரமுடியும் என்றுகிராமசேவையாவர் வற்புறுத்தினுராம்,

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆதரிப்பவர்கள்என்பதற்காகவே நற்சான்றுப் பத்திரத்தைப் பூரணமாக வழங்க கிராமசேவையாளர் மறுத்துவிட்டதாக அனலைதீவைச் சேர்ந்தவர் ஒருவர் அரசாங்கஅதிபரிடம் செய்து கொண்டுள்ள புகாரில் தெரிவித்துள்ளார்.

இதுசம்பந்தமாக உள்ளூராட்சி உள்நாட்டு பொது நிர்வாக பதில் அமைச்சர் திரு. நீல் டி அல்விஸ், தபால் தந்தி அமைச்சர் திரு. செல்லையா குமாரசூரியர் தீவுப்பகுதி எம்.பி, பண்டிதர் கா. பொ. இரத்தின, தீவுப்பகுதி காரியாதிகாரி திரு. விஞயகலிங்கம் ஆகியோருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது

தலைமைக்காரியாலய காரியாதிகாரி திரு. கந்தையா குறிப்பிட்ட கிராமசேவையாளருக்கு நேற்றுமாலை அனுப்பிவைத்துள்ள அவசரத் தந்தியில் இம்மாதம் 13-ந் திகதி இதுபற்றியவிசாரணக்காக கிராமசேவையாளரை வரும்படி அறிவித்துள்ளார். விண்ணப்பதாரருக்கு வழங்கப்பட்ட நற்சான்றுப் பத்திரத்தில்ஒழுக்கம் என்ற இடம் நிரப்பப்படாததற்குரியகாரணத்தை அறிக்கைமூலம் சமர்ப்பிக்குமாறு கேட்டு தீவுப்பகுதி காரியாதிகாரியும் விசாரணையில் ஈடுபட்டுள்ளார்.

[★ இச்செய்திகள் 'ஈழநாடு' நேற்றைய சில பதிப்புக்களில் வெளிவந்தவை]

## மேலும் 5 வழக்குகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இப் பருவகால விசாரணையில் மேலும் ஐந்து வழக்குகளைச் சேர்த்துக் கொள்ளலாமாவென்பது பற்றி ஆலோசனைசெய்யப்பட்டு வருவாகத் தெரிகிறது. இந்த ஐந்து வழக்குகளில் இரண்டு கொலைமுயற்சி வழக்குகளாகும். இதர மூன்றும் கொலை வழக்குகளாகும்.

## ★ பெயரை மாற்ற மறுத்தால்

சென்னை, செப். 11

தமிழ்நாடு வானொலியின் பெயரை மாற்ற மத்திய அரசு மறுத்தால் நானும் எனது கட்சியினரும் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டியிருக்கும் என தமிழ் நாடு முதலமைச்சர் கருணநிதி நேற்று திருச்சியில் நடைபெற்ற கூட்டமொன்றில் தெரிவித்தார்.

தமிழ்நாடு அரசில் இருந்து மூன்று அமைச்சர்கள் ராஜினமாச் செய்து கட்சிக்காக உழைக்க இருப்பது கட்சி பலவீனப்பட்டு விட்டதென்பதைக் காட்டாது. இப்பெரிய ஸ்தாபனத்தைக் கட்டி வளர்த்தவர்கள் அதன் அழிவிற்கு ஒரு காலமும் செயற்பட மாட்டார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரயாணிகளை விடுவிப்பதற்கான காலக்கெடுவை நீடிப்பதற்கு கொமாண்டோக்கள் இணக்கம்

## பிரயாணிகளில் ஒரு பகுதியினர் விடுதலை

அம்மான், செப். 12

**ஜோர்டான் பாலைவனத்தில் காவலில் வைத்திருக்கும் விமானங்களையும் பிரயாணிகளையும் விடுவிப்பதற்கான காலக்கெடுவை நீடிப்பதற்கு அரபுக் கொமாண்டோக்கள் இணங்கியிருக்கிறார்கள்.**

இந்தப் பிரயாணிகள் பற்றி சம்பந்தப்பட்ட நாடுகளுடன் பேச்சுவார்த்தைகள் முற்றுப்பெறும்வரை பிரயாணிகளை ஜோர்டான் தலைநகர் அம்மானுக்கு அனுப்பிவைப்பதற்கும் அரபுக் கொமாண்டோக்கள் இணக்கம் தெரிவித்திருக்கிறார்கள். இவர்களில் முதல் பிரிவினரான சுமார் 23 பேர் ஏற்கனவே அம்மான் வந்து சேர்ந்திருக்கிறார்கள்.

மேற்கத்திய நாடுகளில் காவலில் வைக்கப்பட்டுள்ள அரபுக் கொமாண்டோக்கள் விடுதலையாகி ஜோர்டானுக்கோ வேறு ஏதாவதொரு அரபு நாட்டுக்கோ வந்துசேர்ந்தவுடன் அந்த நாடுகளைச் சேர்ந்த பிரஜைகள் விடுவிக்கப்படுவார்கள் என்றும், இஸ்ரேலிலுள்ள அரபுக் கொமாண்டோக்கள் விடுவிக்கப்பட்டதும் பாலைவனத்தில் சிறைவைக்கப்பட்டுள்ள விமானங்களையும் விமானச் சிப்பந்திகளையும், இஸ்ரேலிய பிரயாணிகளையும் விடுவிப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

## யு. எஸ். விமானங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்

அமெரிக்காவில் உள்நாட்டு வெளிநாட்டு, சேவைகளில் ஈடுபடும் எல்லா விமானங்களிலும் ஆயுதம் தாங்கிய காவலர்களை நிறுத்துவதென்று அமெரிக்க அதிபர் நிக்ஸன் முடிவுசெய்திருக்கிறார். திரு. நிக்ஸனின் உத்தரவு இன்று முதல் அமுலுக்குவருகின்றன.

விமானங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்களை நியமிப்பதுடன், விமான நிலையங்களில் மின் அணு சோதனைக் கருவிகளை நிறுவி நடவடிக்கை எடுக்காத நாடுகளுக்கு விமானங்களை அனுப்பவேண்டாம் என்றும் உலகநாடுகளை அதிபர் நிக்ஸன் கேட்டுக்கொண்டார்.

இதற்கிடையில் ஜோர்டான் பாலைவனத்தில் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரயாணிகளை விடுவிப்பதற்கு ராணுவ நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லையென்றும் சம்பந்தப்பட்ட ஐந்து நாடுகளும் முடிவுசெய்துள்ளன.

இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அடுத்த

சேகுவேரா இயக்கம்

## பாடசாலைகளிலும் பரவுகிறது

கோட்டை, சனி

பாடசாலைகளிலும் சேகுவேரா இயக்கம் பரவியுள்ளதாக கல்வியமைச்சதிகாரிகள் நம்புகின்றனர். சில பிரதேசகல்விமா அதிபர்கள் மாணவர் குழப்பம் பற்றி அறிவித்ததைத் தொடர்ந்தே கல்வியமைச்சு அதிகாரிகள் மேற்கண்டவாறு நம்புகின்றனர்.

தற்போது ஆசிரியர்கள் இடமாற்றத்தை யொட்டி மாணவர்கள் குழப்பம் செய்கிறார்கள் எனவும் முன்னர் மாணவர்கள் ஆசிரியர் இடமாற்றம் செய்யப்படும் பொழுது இவ்வாறு குழப்பம் செய்வதில்லை எனவும் மேற்படி கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாடசாலைகளில் சேகுவேரா இயக்கத்தை தடைசெய்வதற்கு கடும் நடவடிக்கை எடுக்கக்கூடாது சாதாரணமாகவே நடந்துகொள்ளவேண்டும் கடும் நடவடிக்கைகள் எடுத்தால் மேலும் இவ்வியக்கம் தீவிரமாகப் பரவுமேயன்றி தடைப்படாது என மேற்படி அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

## தென்துருவ யானைத்தீவில் விஞ்ஞான ஆராய்ச்சி

லண்டன். செப். 12

இன்னும் மனிதனின் ஆராய்ச்சிக்குட்படாத மர்மத்தீவொன்று தென்துருவத்தில் உள்ளது. யானை போன்ற கடல் நாய்கள் இங்கு வசிப்பதால் இத்தீவுக்கு யானைத்தீவென பெயரிடப்பட்டிருக்கிறது. புதிர்கள் நிறைந்த இந்த மர்மத்தீவில் ஒரு விஞ்ஞான ஆராய்ச்சியை மேற்கொள்ளப் போகிறது. ஒரு பிரிட்டிஷ் கோஷ்டி 14 பேர் கொண்ட இந்த ஆராய்ச்சிக் கோஷ்டி அடுத்த மாதம் புறப்படுகிறது.

இந்தக் குழுவில் ஒரு நில அளவை நிபுணர், ஒரு வைத்தியர், ஒரு புவியியலாளர், ஒரு விலங்கியல் நிபுணர், ஒரு தாவரவியல் நிபுணர் ஆகியோரும் அடங்குவர். இந்தக் கோஷ்டிக்கு கமாண்டர் மல்கம்பேர்லி தலைமை தாங்குவார். இவர் தென்துருவபனிப்படல ஆராய்ச்சியில் அனுபவமுடையவர்.

இக் கோஷ்டியினர் இப்பொழுது ஸ்கொட்லாந்திலுள்ள கேய்ன்நோம்மலைத் தொடரில் தீவிர பயிற்சி பெற்று வருகின்றனர். யானைத்தீவில் எதிர்நோக்க வேண்டிய கால நிலைகளை இங்குள்ள மலைத்தொடரில் காணக்கூடியதாக இருக்கிறது.

இக் கோஷ்டியினர் அடுத்த மாதம் ஆரம்பத்தில் விமான மூலம் உருகுவேக்கு பயணமாகிறார்கள். அங்கிருந்து 'என்டூரன்ஸ்' என்ற கப்பலில் யானைத்தீவுக்கு கிளம்புவார்கள். நவம்பர் மாதத்தில் இவர்கள் இத்தீவை அடைவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

தென்துருவத்திலுள்ள செல்டன் தீவுகளில் யானைத்தீவுதான் மிகப் பெரியது. உயர்ந்த மலைகளால் சூழப்பட்ட இத்தீவு எங்கும்பனிப்படலத்தால் மூடப்பட்டிருக்கிறது. இதன் உட்பிரவேசத்தில் மனிதன் இன்னும் காலடி எடுத்து வைக்கவில்லை. இங்கு பயங்கரமான பனிப்பாறைப் பிளவுகளும் செங்குத்தான சறுக்கு மலைச் சரிவுகளும் நிறைந்திருப்பதாக விமான ஆராய்ச்சிகளிலிருந்து தெரியவருகிறது.

இத் தீவு பனிமலைப்பாறைகள் நிறைந்தபிரதேசமாகையால் கமாண்டர் பேர்லியும் அவரது கோஷ்டியினரும் இங்கு பெரிய இயந்திர சாதனங்களையோ வண்டிகளையோ கொண்டுசெல்லவில்லை. கால்நடையாகவே சென்று கூடாரமடித்து இத்தீவில் ஆறு மாதங்கள் வரை வசிப்பதற்கு இவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள். இத் தீவிலுள்ள விசித்திரமான மிருக இனங்கள், பறவைகள், தாவர வகைகள் போன்றவற்றையும் இத்தீவின் நில அமைப்பையும் இவர்கள் ஆராய்வர்.

## வினோபாஜியின் பிறந்தநாள்

புல இடங்களிலும் கொண்டாட்டம்

## பொருளாதார வளர்ச்சிக்கு பிரான்ஸின் உதவி

### பாரிஸில் பிரதமர் பேச்சு நடத்துவார்

லுசாக்கா, செப். 12

ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா திங்கட்கிழமை பிரான்ஸ் நாட்டுக்கு உத்தியோகரீதியில் விஜயம் செய்வார். இவர் பிரான்சின் பிரதமமந்திரி திரு. டெல்மா, வெளிநாட்டமைச்சர் மைமார் ஆகியோருடன் இருநாடுகளுக்குமிடையே பொருளாதார, ராஜிய தொடர்புகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார் எனத் தெரியவருகிறது. கைத்தொழில், தொழில்நுட்ப உதவிகள் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதுடன் வானிலை, பெற்றோலியம் ஆகிய விடயங்களில் இருநாடுகளும் ஒத்துழைப்பதுபற்றியும் பேச்சுவார்த்தை நடத்துவர் என நம்பப்படுகிறது. லுசாக்காவில் நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாட்டில் கலந்துகொண்டபின் பிரதமர் பிரான்ஸ் செல்கிறார்.

இலங்கைப் பிரதமர் பிரான்சின் பிரதம மந்திரியுடனும் உயர்தர அதிகாரிகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தியபின், அந்நாட்டிலுள்ள வர்த்தகர்கள், கைத்தொழில் அதிபர்கள் ஆகியோருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையிடமிருந்து 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபாவிற்கு மேலும் பிரான்ஸ் தேயிலை வாங்கும் என நம்பப்படுகிறது. இப் பேச்சுவார்த்தைகளுக்குப் பின் பிரான்சிலுள்ள கைத்தொழில் நிலையங்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் ஆகிய இடங்களுக்குச் சென்று பார்வையிடுவார்,

பிரதமருடன் வெளிவிவகார அமைச்சின் நிரந்தரக் காரியதரிசி திரு. ரத்தினவேலும் கூடச் செல்வார்.

### இந்திய பிரதமர்

உச்சிமகாநாட்டில் கலந்துகொண்டபின் நைரோபி வழியாக இந்தியப் பிரதமர் இந்திராகாந்தி இன்று பம்பாய் வந்து சேர்ந்தார். அவர் தம்மைப் பேட்டிகண்ட இந்திய பத்திரிகை நிருபர்களிடையே பேசுகையில்: நடுநிலைமை நாடுகளின் உச்சிமகாநாடு திருப்தியான பயனைத் தந்துள்ளது. அது சிறந்த பயனை மேலும் தரவேண்டுமானால், இவ்வித மகாநாட்டின் தொடர் நடவடிக்கைமூலமேசாத்தியமாகலாமெனத் தெரிவித்தார். பிரதமர் இந்திராகாந்தியை சாம்பியா ஜனாதிபதி கவுண்டா வழியனுப்பி வைத்தார்.

## 55 வயது ஓய்வுத்திட்டத்தை அமுல் நடத்துவது சிரமம்

— காலி எம். பி,

கொழும்பு, சனி

55 வயதில் ஓய்வுபெற வேண்டுமென்ற அரசாங்கத்தின் திட்டத்தை அமுல் நடத்துவதில் சிரமமேற்படுமென்றும் இத்திட்டம் நல்லதல்லவென்றும் காலி எம். பி. டாக்டர் டபிள்யு. தகநாயக்கா ஆட்சிமன்றத்தில் கூறினார்.

இடைக்கால வரவுசெலவுத்திட்ட அறிக்கைமீது பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

டாக்டர் தகநாயக்காபேசுகையில் கூறியதாவது.

முன்னர் ஒரு தடவை இதுபோன்ற இடைக்கால வரவுசெலவுத்திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டபோது தற்போதைய நிதி அமைச்சரான திரு. என். எம். பெரேரா அதை எதிர்த்து ஒழுங்குப் பிரச்னை ஒன்றைக் கிளப்பினார். அன்று திரு. என். எம், எதை எதிர்த்தாரோ இன்று அவரே இந்த இடைக்கால வரவுசெலவு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். நான் இதை இப்போது எதிர்க்கவில்லை. ஆனால் சில கருத்துக்களைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

[illegible] கொள்ள முடியாது. 55 வயதுவரை கடமையாற்றி ஓய்வு பெறுபவர்களுக்குப் பதிலாக புதிய ஆட்களை நியமிக்கும்போது அந்த இடங்களில் அவர்களுடைய அனுபவத்துக்கும் தகுதிக்கும் ஏற்றவர்களை நியமனம் செய்ய முடியாது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேலையற்றவர்களுக்கு வேலை வழங்குவதற்காக சேவையில் உள்ளவர்களை நிற்பாட்டியதின் மூலம்தான் வேலை வழங்க முடியும்என்ற அரசாங்கத்தின் கருத்துத் தவறானது. 1968-ல் 12000 பட்டதாரிகள் வேலையற்றிருந்தார்கள். 1970-ல் மேலும் 5000 பட்டதாரிகள் வெளியேறுவார்கள் என்று நான் அமைச்சராக இருந்தபோது தெரிவித்திருந்தேன். அதன் பிரகாரம் தற்போதும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 17,000 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் உடனடியாக வேலை வழங்க வேண்டும்.

விவசாயப்படை முகாம்களை மூடியதின்மூலம் 12,000 பேருக்கு வேலை வசதி இல்லாமல் போய்விட்டது 4 வருடகால விவசாயப்பயிற்சி பெற்றவர்களை வெளியேற்றி விவசாய முகாம்களைக் கலைத்ததினால் நாட்டில் வேலையில்லாப் பிரச்னை மேலும் அதிகரித்துள்ளது. இவர்களை மீண்டும் எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

### மக்கள் சிரமம்

முசலி, சனி

வவனிக்குளம் மூண்டுமுறி

### ஏமாற்றத்துடன் திரும்பினர்

நெல்லியடி, சனி

வீதி ஒழுங்கு முறை பற்றிய இலவசப் படக்காட்சி பார்க்க பருத்தித்துறை பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் கூடிய பெருந்திரளான மக்கள்படம் பார்க்காமலேயே ஏமாற்றத்துடன் திரும்பினர். இச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

வீதி ஒழுங்கு முறை பற்றிய இலவசப் படக்காட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றன.

விமானங்களில் ஆயுதம் தாங்கிய காவலர்களை நியமிப்பதுடன், விமான நிலையங்களில் மின் அணு சோதனைக் கருவிகளை நிறுவி அபாயகரமான ஆயுதங்களை கண்டு பிடிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றது. விமானங்களைத்திசை திருப்புகிறவர்களுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எதுவும் எடுப்பதில்லையென்றும் சம்பந்தப்பட்ட ஐந்து நாடுகளும் முடிவுசெய்துள்ளன.

இஸ்ரேல் பிரதமர் திருமதி கோல்டா மெயர் அடுத்த வெள்ளியன்று நியூயோர்க்கில் அதிபர் நிக்ஸனை சந்திப்பார் என்று இப்பொழுது அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஈழத்து எழுத்தாளருக்கு சோவியத் வாழ்த்து

மாஸ்கோ, செப். 12

சோவியத் எழுத்தாளர் சங்கம் பின்வரும் செய்தியை இலங்கை மக்கள் எழுத்தாளர் முன்னணிக்கு அனுப்பியுள்ளது:

சர்வதேச எழுத்தாளர் தினத்தை ஒட்டி எமது இதய பூர்வமான நேச வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறோம் தமது தாயகத்தின் சமூக-கலாச்சார முன்னேற்றத்திற்காகவும், ஜனநாயகத்திற்காகவும், உலக சமாதானத்திற்காகவும் உறுதியுடன் போராடும் இலங்கையின் முற்போக்கு எழுத்தாளர்களுடனான நல்ல உறவுகளை நாம் பெரிதும் மதிக்கிறோம்.

உங்களது மாபெரும் மக்களின் வாழ்க்கையை உண்மை ஒளியில் சித்திரிக்கும் ஈழத்து முற்போக்கு எழுத்தாளர்களின் நூல்களில் சோவியத் வாசகர்களுக்கு நல்ல பரிச்சயம் உண்டு என்பதுடன், இந்த இலக்கியப் படைப்புகளை அவர்கள் வெகுவாக நேசிக்கிறார்கள். சாதாரண மனிதனின் கௌரவத்திற்காகவும், சமூக வாழ்வில் அவனுக்கு உரிய இடத்தைப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் போராடும் ஈழத்து இலக்கியத்தை சோவியத் மக்கள் பெரிதும் விரும்புகிறார்கள். பிற்போக்கு ஏகாதிபத்திய கலாச்சாரத்தின் நாசகார பாதிப்பின் மோசமான நிலைமைகளில் போராடும் உங்களின் இலக்கியம் உண்மையான மானி...த்தினதும் அதன் அமரத்துவமிக்க உயர் மதிப்பீடுகளினதும் கொடியை உயர்த்திப் பிடிக்கிறது, இந்த சந்தர்ப்பத்தில் இலங்கை மக்கள் எழுத்தாளர் முன்னணிக்கும், ஈழத்து இலக்கியத்திற்கும் பெரு வெற்றிகள் கிட்டுவதாகுக என வாழ்த்துகிறோம்.

# இந்து, இஸ்லாம் பற்றி புதிய வெளியீடு

லண்டன், செப். 12

ஆசியாவிலுள்ள பிரதான மதங்களையும், சமூக பழக்க வழக்கங்களையும் தெளிவுபடுத்தும் புதிய வெளியீடு ஒன்றை லண்டனிலுள்ள இன உறவுக் கமிஷன் பிரசுரித்துள்ளது. 88 பக்கங்களைக் கொண்ட இந்த ஏடு இந்து சமயம், இஸ்லாம், சீக்கிய மதம் ஆகியன பற்றி துல்லியமாக விளக்குகிறது.

பிரிட்டிஷ் நிர்வாகத்தினர் ஆசிய குடியேற்ற வாசிகளுக்கு மத விடுமுறைகள் வழங்கும்பொருட்டு இம்மும் மதங்களினதும் பிரதான பண்டிகைகள் இதில் தரப்பட்டிருக்கின்றன. பிரிட்டனில் இன நல்லுறவைப் பலப்படுத்தும் நோக்கமாகவே இவ்வெளியீடு பிரசுரிக்கப்பட்டுள்ளதாக இன உறவுக் கமிஷன் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மூவர் கூட்டாகச் சேர்ந்து இந்த நூலை எழுதியுள்ளனர். சுரே சர்வகலாசாலையின் இந்து மத, ஆசியகலாச்சார விரிவுரையாளரான திருமதி. பெக்கிஹோல்ரோய்ட், ஹடர்பீட் சர்வகலாசாலையில் ஆசிய மத விரிவுரையாளராக கடமையாற்றும் ஜ..ப். முகம்மது இக்பால் பிரட்போர்ட் தொழில்நுட்பகல்லூரியின் உருது மொழி விரிவுரையாளரான திரு. தராம் குமார் ஆகியோரே இவ்வாசிரியர்களாவர்.

## கட்டிடம் பூர்த்தி

நெல்லியடி, சனி

புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் 15,000 ரூபா செலவிலான புதிய கட்டிட வேலைகள் யாவும் பூர்த்தியாகிவிட்டன.

கொள்ளவேண்டும் கடும் நடவடிக்கைகள் எடுத்தால் மேலும் இவ்வியக்கம் தீவிரமாகப் பரவுமேயன்றி தடைப்படாது என மேற்படி அதிகாரிகள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர்.

—

சாட்டி

## மாதா திருநாள்

நாரந்தனை, சனி

தீவுப்பகுதியின் பிரசித்தி பெற்ற யாத்திரை ஸ்தலங்களில் ஒன்றான வேலணை சாட்டி சிந்தாத்திரை மாதா தேவாலய வருடாந்த உற்சவம் இம்மாதம் 15-ம் திகதி கொடியேற்ற வைபவத்துடன ஆரம்பமாகிறது'

தினமும் ஆராதனைகள் மண்டதீவு கட்டளைக் குரவர் வண பிதா. எஸ் ஏ ஞானப்பிரகாசம் அடிகளால் நிறைவேற்றப்படும் 23ம் திகதி மாலை வேஸ்பரும் 24ம் திகதி காலை பாடற் பூசையும் நடைபெற்று திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடன் உற்சவம் முடிவடையும். யாத்திரிகர்களின் வசதிக்காக பஸ் சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

—

## ஆண்டுவிழா

அம்பன், சனி

பருத்தித்துறைதுள்ளுமீன் விளையாட்டுக் கழகத்தினரின் 2-வது ஆண்டு நிறைவுவிழா பருத்தித்துறை கடற்கரை மைதானத்திலுள்ள சிவபாதம் அரங்கில்' இம்மாதம் 20, 21, 22-ந் திகதிகளில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் வடமராட்சி ஆணழகன் தெரிவு, உடல் வலிமைக்காட்சி, 5 மைல் மரதன் ஓட்டம், நீச்சல் போட்டி, அஞ்சல் ஓட்டம், மல்யுத்தம், கட்டுமரம் வலித்தல் போட்டி, இயந்திரவள்ள ஓட்டப்பேட்டி. ஆகியன இடம் பெறவுள்ளன.

0 0 0

பருத்தித்துறையூனைட்டட் விளையாட்டுக் கழகத்தினரின் 9-வது ஆண்டு விழா திக்கமுனையிலுள்ள யூனைட்டட விளையாட்டுத் திடலில் இம்மாதம் 14, 15-ம் திகதிகளில் மின்னொளியில் நடைபெறவிருக்கின்றது. இவ்விழாவில் 50மைல் சைய்க்கிள் ஓட்டப்போட்டி அஞ்சலோட்டம் முதலியநிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. பொலிஸ் கோஷ்டிக்கும் இராணுவக் கோஷ்டிக்குமிடையிலான கரபந்தாட்டப்போட்டியும் நாடகங்களும் விழாவில் இடம் பெறும்.

# பிறந்தினம்

## பல இடங்களிலும் கொண்டாட்டம்

பம்பாய், செப் 12

பூதான இயக்கத் தலைவர் விநோபாஜியின் 76-வது பிறந்த தினம் நேற்று வார்தா ஆச்சிரமத்தில் கொண்டாடப்பட்டது. திரு. நாராயணு என்பவரால் விநோபாஜி பற்றி எழுதப்பட்ட 'விநோபாஜியின் வாழ்க்கையும் சேவையும்' எனும் நூலை இந்திய உப ஜனாதிபதி திரு பதக் வெளியிட்டுப் பேசுகையில் காந்திஜிக்குப் பின் அவரது கொள்கைகளை தன்வாழ்வில் கடைப்பிடித்து வருபவர் விநோபாஜி. ஏழை மக்கள்மீது கருணைகொண்டு பூதான இயக்கத்தை நடத்தி வருகிறார். ஐவகைத் தானங்களில் இன்று நாட்டு மக்களுககு மிக அவசியயான பூதான இயக்கத்தை நடாத்தி வருவதோடு சர்வோதய சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டு வரும் புனிதர் எனக் கூறினர்.

பட்ண, டில்லி ஆகிய இடங்களிலும் விநோபாஜியின் பிறந்தநாள் கொண்டாட்டம் கொண்டாடப்பட்டது.

மராட்டிய மாநிலத்தில் சுற்றுப்பிரயாணம் செய்த பொழுது சுகயீனமடைந்தார். இப்பொழுது சுகமடைந்துள்ள அவர் வார்தாவை அடுத்த படினரில் ஓய்வுபெற்று வருகிறார்.

—

## எம். பி. க்கு மகஜர்

சுழிபுரம், செவ்வாய்

பண்டத்தரிப்பு சமசமாஜ வாலிப முன்னணியினர் நடத்திய கருத்தரங்கில் வட்டுக்கோட்டைத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆ. தியாகராசா கலந்து கொண்டு கருத்துரை வழங்கினர்.

கூட்டத்துக்கு முன்னணித் தலைவர் திரு எஸ் சின்னராசா தலைமை வகித்தார். பண்டத்தரிப்பின் தேவைகள் கொண்ட ஒரு மகஜர் ஆட்சிமன்ற உறுப்பினரிடம் கையளிக்கப்பட்டு உடன் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது.

பண்டத்தரிப்புக் கிராம வைத்தியசாலைக்கு ஒரு (டி எம். ஒ.) வைத்திய அதிபரை நியமித்தல். மக்கள் வங்கிக் கிளை நிறுவுதல் விவசாயிகளின் கடன் உதவியைப் பெற்றுக்கொடுத்தல். தற்போது உள்ள பண்டத்தரிப்பு தபால் நிலையத்தை தரம் உயர்த்தி விஸ்தரித்தல்'

விற்பனை வசதி இலாகாக் கடை ஒன்றைத் திறக்க வழிசெய்தல் போன்ற கோரிக்கைகள் அவரிடம் கொடுக்கப்பட்டன.

## புதுக்குடியிருப்பு சந்தி

புதுக்குடியிருப்பு, சனி

புதுக்குடியிருப்பு முக்கிய சந்தி விஸ்தரிக்கப்படாமையால் வாகனங்கள் விலத்திச் செல்லவோ நிறுத்தி வைக்கவோ முடியாத சூழ்நிலையேற்பட்டுள்ளது. இச் சந்தியிலேயே பொதுச் சந்தையும் மற்றும்பல கடைகளும் அமைந்துள்ளமையால் பொதுமக்கள் வாகனங்களின் நெரிசலினுல் ஒழுங்காக கடைகளுக்குச் சென்று திரும்பமுடியாத நிலையேற்பட்டுள்ளது.

இச் சந்தி விஸ்தரிப்புச்சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கி. மு. சங்கத்தினர் தொடர்பு கொண்டும் பயனேதும் கிடைக்கவில்லையெனத் தெரிகிறது.

......

திருகோணமலை

## பஸ் நிலையம் திருத்தியமைக்க உத்தரவு

திருகோணமலை, சனி

திருகோணமலை பஸ்நிலையத்தின் சீர்கேடு பற்றி கோணைநகர்த் தமிழணி இயக்கத்தினர் திருகோணமலை நகரசபைத் தலைவர் திரு. சிவானந்தத்தை நேரில் கண்டு எடுத்துரைத்தனர்! இதைத் தொடர்ந்து பஸ் நிலையத்தைத் திருத்துவதற்கு நகரசபைத் தலைவர் உடனடி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

திருகோணமலையில் சில பெண்கள் பொது மதுபானக்கடைகளில் மதுபானம் அருந்திவிட்டுக் கேவலமான முறையில் நடப்பதைச் சுட்டிக்காட்டிய தமிழணி இயக்கத்தினர், உடனடி நடவடிக்கை எடுத்து இதைத் தடைசெய்யவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டனர். பொலிஸ் அதிகாரியின் ஒத்துழைப்புடன் இதற்கு முற்றுப்புள்ளி வைப்பதாக நகரசபைத் தலைவர் உறுதியளித்துள்ளார். (சி.ஜெ)

அன்று திரு. என். எம். எதை எதிர்த்தாரோ இன்று அவரே இந்த இடைக்கால வரவுசெலவு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார். நான் இதை இப்போது எதிர்க்கவில்லை. ஆனல் சில கருத்துக்களைக் கூறிவைக்க விரும்புகிறேன்.

### 55 வயது திட்டம் சரியானதல்ல

55 வயதில் ஓய்வுபெற வேண்டும் என்ற திட்டத்தை அமுல் நடத்துவதில் பலத்த சிரமம் ஏற்படும் என்று கருதுகிறேன். இத்திட்டத்தை மாற்றி அமைத்து கட்டாய ஓய்வு பெறும் வயது 60 ஆக உயர்த்தப்பட வேண்டும்.

வேலையற்றவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்காகவே இவ்வித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறுவதை ஏற்றுக்

தற்போதும் பட்டதாரிகளின் எண்ணிக்கை 17,000 ஆக உயர்ந்துள்ளது. இவர்கள் அனைவருக்கும் உடனடி

## மக்கள் சிரமம்

முசலி, சனி

வவனிக்குளம் மூண்டுமுறிபு, பனங்காமம், நட்டான் கண்டல், இராமையன் குளம் ஆகிய கிராமங்கள், மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்து இருக்கின்றபடியால் இப்பகுதியிலுள்ள மக்கள் அரசாங்கத்துடன் தொடர்பான தமது வேலைகளைக்கவனிக்க மன்னரிலுள்ள அடம்பன் கிராமத்திலிருக்கும் மாந்தைக் காரியாதிகாரி பிரிவுக்குச்செல்லவேண்டியுள்ளது. கூப்பன் சம்பந்தப்பட்ட சிறு அலுவலுக்கும் மக்கள் மாந்தைக்காரியாதிகாரி கந்தோருக்கே செல்ல வேண்டியுள்ளது.

# 'விவசாயப் படையைக் கலைத்திருக்கக் கூடாது'

**— நிந்தாவூர் எம், பி.**

நிந்தாவூர் எம். பி. ஜனப் முஸ்தபா பேசுகையில்கூறியதாவது!

விவசாயப்படையை அரசாங்கம் கலைத்திருக்கக் கூடாது. கடந்த அரசாங்க காலத்தில் இ. போ. சபையில் நியமிக்கப்பட்டிருந்த ஊழியர்களையும் அரசாங்கம் நிறுத்திவிட்டது. அதையும் அவ்விதம் செய்திருக்கக்கூடாது.

''வீடு இல்லாதவர்களின் பிரச்னையைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன், கமிட்டிகளை நியமித்திருக்கிறார். இவ்விதம் செய்வதன் மூலம் பிரச்னை தீராது. செயல் முறையில் இதற்குத் தீர்வு காணவேண்டும். கொழும்பு மத்திய தொகுதியில் திரு. பீட்டர் கெனமன் வசித்து வருவதால் வீட்டுப் பிரச்னைகள் பற்றி அவர் அதிகம் அறிந்திருப்பார் என நினைக்கின்றேன். அரசாங்கக் காணிகளில் வீடமைத்து, வீடு இல்லாதவர்களுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

# எம். பி.க்கள் வெளிநாடு செல்ல அனுமதி யுண்டா?

இலங்கையிலிருந்து வெளிநாட்டுக்குச் செல்ல மாணவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்களென நிதி அமைச்சர் முன்னர் அறிவித்திருந்தார். அப்படியாயின் அரசாங்க எம். பிக்கள் பலர் வெளிநாடுகள் சென்றுள்ளனரே? அவர்களுக்கு எதுவித தடையும் விதிக்கப்படவில்லையா?

ஒத்திவைப்புப் பிரேரணை மீது எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன பேசுகையில் பதுளை, கீனக்கொல்லைத் தோட்டத்தில் நடைபெற்ற இரு தொழிலாளர் கொலை சம்பந்தமாக எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. இறந்தவர்களின் சொந்தக்காரரிடம் பிரேதத்தைக்கூட வழங்குவதற்கு மறுக்கப்பட்டது பற்றி நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

### தவச பற்றிய நடவடிக்கை என்ன?

கொலன்ன எம். பி. திரு. விமலநாயக்கா பேசுகையில், தினபதி, தவச, சன் பத்திரிகைக் காரியாலயத்தில் நடைபெற்ற வேலைநிறுத்தம் பற்றித் தொழில் அமைச்சர் எவ்வித நடவடிக்கை எடுத்துள்ளார் என்று கேட்டார். அது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகத் தொழில் அமைச்சர் கூறினர்,

பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் கூடிய பெருந்திரளானமக்கள்படம் பார்க்காமலேயே ஏமாற்றத்துடன் திரும்பினர். இச்சம்பவம் நேற்று முன்தினம் மாலை நடந்தது.

வீதி ஒழுங்கு முறை பற்றிய இலவசப் படக்காட்சி பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் காட்டப்படுமென பொலிஸ் வாகனத்தில் பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டதை யடுத்து மைதானத்தில் பெருந்திரளான மக்கள் கூடிய போதிலும் மின்சாரக் கோளாறு காரணமாக அறிவித்தபடி படம் காண்பிக்க முடியாது போயிற்று மக்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர்.

கடந்த பல நாட்களாக இம்மாதிரி மின்சாரம் கோளாறு செய்து வருவது குறிப்பிடத்தக்கது. நகர பொதுமக்கள் இதனுல் பெரிதும் கஷ்டமடைந்து வருகின்றனர்.

— —

## சமூகம் முன்னேற...

எழுதுமட்டுவாள், சனி

'ஒரு சமூகம் முன்னேற வேண்டுமானல் அச் சமூகத்தில் உள்ள ஒவ்வொருவரிடமும் தன்னம்பிக்கையும் முயற்சியும் இருக்க வேண்டும். எழுச்சியும் உணர்ச்சியும் கொண்ட சமூகமே இன்று முற்போக்கான பாதையில் சென்றுகொண்டிருக்கிறது என நாவற்குழி தெற்கு மகா விஷ்ணு வித்தியாசாலையில் தலைமையாசிரியராகக் கடமையாற்றி கோயிலாக்கண்டி வித்தியாலயத்திற்கு மாற்றலாகிச் செல்லும் திரு வி. எஸ். கந்தையா தமக்களிக்கப்பட்ட பிரிவுபசாரத்திற்கு நன்றி தெரிவித்துப் பேசுகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். வி. சுப்பிரமணியமுட்பட வேறுசிலரும் பேசினர்.

......

## 8 வயதுச் சிறுவன் பஸ்மோதி மரணம்

கோட்டை, சனி

8 வயதுச்சிறுவன் ஒருவன் இ. போ. ச. பஸ் ஒன்றில் மோதி ஸ்தலத்திலேயே மரணமானன்.

இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் காலை எதுல் கோட்டைப் பாலத்துக்கருகாமையில் நடைபெற்றது இதேபஸ்ஸினுல் மோதப்பட்ட மற்றுமொருவர் கடுங்காயங்களுடன் கவலைக்கிடமான நிலையில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

அமைதியாக பிரச்னைகளைத் தீர்த்தல், அன்பான முறைகளைக் கையாளுதல், ஆசைகளைக் குறைத்தல் இவற்றின் மூலம்தான் அகிம்சையைக் கடைப்பிடிக்கலாம்.
— மகாத்மாகாந்தி.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49, Jaffna: Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆவணிமாதம்
28-ந் திகதி (13-9-70)

## திரு. கிரியின் மேலான யோசனை

ஒரு தொழிற்சாலை அல்லது ஸ்தாபனத்தில் வேலைசெய்யும் மொத்த தொழிலாளருள் நூற்றுக்குப் பத்துப் பேர் விகிதமாவது அங்கத்தவராக இருந்தாலே, அந்தத் தொழிற்சங்கத்தை பதிவுசெய்யலாமென சட்டம் செய்ய வேண்டுமென்று இந்திய ஜனாதிபதி கிரி அவர்கள் ஹைதராபாத்தில் ''கைத்தொழில் உறவுகள்'' என்ற கருத்தரங்கை ஆரம்பித்து பேசுகையில் ஒரு நல்ல யோசனையைக் கூறினார்.

இன்றுள்ள தொழிற்சங்க சட்டப்படி, இலங்கையைப் போல் இந்தியாவிலும் ஏழு தொழிலாளர் சேர்ந்து, ஒருதொழிற்சங்கம் அமைப்பதாக மனுச்செய்தால், அதைப் பதிவுசெய்ய வேண்டும். அதனால் பலபலபோட்டிச் சங்கங்கள் ஏற்பட்டு தொழிலாளர் ஒன்றுபடமுடியாமல் போவதுடன் தொழில் அமைதியும் கெடுவதாக முன்னரும் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தோம். ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கமே இருக்க வேண்டுமென்று சட்டம் செய்தால், தொழிலாளரிடையே ஒற்றுமை பலப்படுவதுடன், அவர்கள் அதிக நன்மைகளைப் பெறவும், தொழில் வளரவும் கூடியதாக இருக்கும். இந்த இலட்சியத்தை நிறைவேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று இந்திய ஜனாதிபதி கூறியதுடன், பல தொழிற்சங்கங்களும் ஒரு பொதுவான வேலைத்திட்டத்தை அமைத்து செயலாற்றவேண்டுமென்று வற்புறுத்தினார் தொழிற்சங்க இயக்கத்திலும் தொழிலாளர் நன்மையிலும் நீண்டகாலமாக ஈடுபட்டவரான கிரி அவர்கள் கூறியுள்ள இந்த மேலான யோசனையை ஏற்றுக் காரியம் செய்வதாயின், அது தொழிலாளர்களுக்கு நன்மை பயப்பதுடன் நாட்டின் முன்னேற்

யோசனைகள் இச்சமயம் இலங்கைக்கும் பொருத்தமாகவும் பயன்படுவதாகவுமிருக்கும். இலங்கையிலே பல பல தொழிற்சங்கங்கள் ஏற்பட்டு, தொழிலாளர் ஒற்றுமையைக் குலைப்பதுடன் தொழில்களும் வளர முடியாதபடி தடுக்கின்றன. ஒவ்வொரு அரசியல் கட்சியும் ஒரு தொழிற்சாலையிலேயே வெவ்வேறு தொழிற்சங்கத்தை ஆரம்பித்து நடத்துவதால் தொழிலாளருக்குள்ளாகவே கலவரங்கள் ஏற்படவும், தொழில் அமைதி கெடவும் செய்கின்றன. இலங்கை அரசாங்கத்துக்கு இது பெரிய மண்டையிடியைக் கொடுத்துள்ளது. நாட்டின் நன்மையையும் தொழில்முன்னேற்றத்தையும் கருதி, கிரி அவர்கள் கூறிய மேற்குறித்த யோசனையை ஏன் இங்கும் செயல்படுத்தக் கூடாது?

ஒரு தொழிலுக்கு ஒரு சங்கம் என்று புதிய சட்டம் செய்வதாயின் இங்கு சில அரசியல்கட்சிகள் இந்த யோசனையை எதிர்க்கக் கூடும். என்றாலும் இன்று கூட்டுமுன்னணி அரசாங்கத்திலே இடதுசாரிக் கட்சிகளில் அநேகமாகப் பலவும் இருப்பதாலும், அரசாங்கத்துக்கு பார்லிமெண்டில் அதிக பலம் இருப்பதாலும் தொழிற்சங்க சட்டத்தில் மேற்குறித்த திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றுவது கஷ்டமல்ல. திடீரென அவ்விதம் செய்ய சிலர் விரும்பாமலிருக்கலாம். ஆனால் 7 பேர் சேர்ந்து சங்கம் அமைக்க மனுச் செய்தால், அச் சங்கத்தை பதிவுசெய்யவேண்டுமென்பதற்குப் பதிலாக, கிரி அவர்கள் கூறியபடி, பத்தில் ஒரு பகுதி தொழிலாளரின் ஆதரவுபெற்ற சங்கத்தையே அங்கீகரிக்க வேண்டுமென்று முதற்படியாக ஏற்பாடு செய்வதாயின், இங்கு தொழில்அமைதி ஓரளவு ஏற்படுவதுடன், தொழிற்

# கடவுளும் தி. மு. கழகமும்

### ஐயாறன் எழுதுவது

தி. மு. க. வின் பக்கமே கடவுள் இருக்கிறாராம். தமிழ்நாடு சட்டசபையில் முதல் அமைச்சர் கருணாநிதி இப்படித்தெரிவித்தார், கடவுள் தங்கள் பக்கம் இருப்பதால் தான், மழை சரிவரப் பொழியாவிடினும் இம்முறை விளைச்சல் நன்றாக இருப்பதாகவும் அவர் அத்தாட்சி காட்டினார்.

''கடவுள்மீது தி. மு. க. வினருக்கு நம்பிக்கையில்லாதபோது, அவர்கள் பக்கம் எப்படி கடவுள் இருக்க முடியும்?'' என்று எதிர்க் கட்சித்தலைவர் கருத்திருமன் திருப்பிக் கேட்டவுடன் முதல் அமைச்சர் கருணாநிதி ''கடவுளில் எங்களுக்கு நம்பிக்கையில்லாமலிருக்கலாம் காங்கிரஸ்காரர் கூறுவது போல் நாங்கள் கடவுள் இருப்பதை ஒப்புக்கொள்ளவில்லை. ஆனால் கடவுள் எங்களை ஒப்புக்கொள்ளும்வகையில், நாங்கள் காரியங்களைச் செய்கிறோம்'' என்றார்.

'கடவுளின்திருவுள்ளத்தை அறிவது முடியாது. ஆகவே அவர் எப்போதும் உங்களுடனேயே இருப்பார் என்று நினைக்காதீர்கள்'' என்று திரு. கருத்திருமன் சபையில் பலத்த சிரிப்புக்கிடையில் பதிலளித்ததாக சென்னைப் பத்திரிகைகளில் ஒரு செய்தியைப்பார்த்தேன்.

0 0 0

கடவுள் எங்கள் பக்கம்தான் என்று முதல் அமைச்சர் கருணாநிதி கூறியதிலிருந்தும் மழையில்லாமலே அதிக விளைச்சல் விளையும்படி கடவுளால் செய்யமுடியும் என்று தமிழக முதல் அமைச்சர் நம்புகையில் அவருக்கு கடவுவில் நம்பிக்கையில்லை என்று எப்படிக் கூறியிருக்க முடியும்?

மேலும் கடவுள்நம்பிக்கை தங்களுக்கு இருப்பதாக உதட்டளவில் கூறுபவர்களைவிட, கடவுள் விருப்பப்படி நடப்பவர்களே உண்மையான ஆஸ்திகர்கள். கடவுளின் விருப்பமென்ன? என்பதை அறிந்து அதன்படி நடப்பதென்பது சுலபமன்று.

இன்று தமிழகத்தில் தி. மு. க, ஆட்சி நடக்கிறதென்றால், அதுவும் கடவுளின் திருவருளே எல்லார்க்கும் பொதுவான கடவுளின் தன்மையை யார்தான் திட்டமாகக்கூறமுடியும்? ஆனால் ஒன்று அவர் எப்போதும் 'நன்றுடையான், தீயதே இல்லான்'' எல்லாம் அவன் செயல், நடப்பதெல்லாம் நன்மைக்கே என்பது பெரியோர்களின் அனுபவ வாக்கு.

0 0 0

கன்யாகுமரியிலே சுவாமி விவேகானந்தரின் கோயில் திறப்பு விழாவில் முதல் அமைச்சர் கருணாநிதிகலந்து கொண்டு அருமையான பிரசங்கம் செய்துள்ளார் அதைப்படித்த இலங்கையிலுள்ள ஒரு பெரியவர் அவரைப் பெரிதும் பாராட்டினார். தி மு க. தமிழகத்தில் ஆட்சி செய்யும்போதுதான் திருவாரூர்த் தேர் பல வருடங்களுக்குப் பின் ஓடியது. பல பெரிய கோயில் கும்பாபிஷேகங்கள் நடக்கின்றன, சுவாமி விவேகானந்தர் கோயிலும் கன்யாகுமரியில் கட்டப்பட்டுள்ளது

நாம் கடவுளிடமிருந்து ஓடப்பார்த்தாலும் அவர் நம்மை விடமாட்டாராம். அறக் கருணையாலோ, மறக் கருணையாலோ நம்மை ஆட்கொள்வதுதான் அவரது வேலை என்பது அனுபூதிமான்களின் வாக்காகும்

முதலில் நாஸ்திகராக இருந்தவர்கள் பிறகு நல்ல ஆஸ்திகர்களாக மாறியிருப்பதற்குப் பல அத்தாட்சிகள் உண்டு. வாழ்க்கையில் அனுபவம் ஏற்பட ஏற்பட இந்த நம்பிக்கையும் அதிகமாகும். ஆகவே தமிழக முதல் அமைச்சருக்கும், சகாக்களுக்கும் இனி தெய்வ நம்பிக்கை ஏற்படுமாயின் அதில் வியப்பில்லை.

## நோய்க்கு வைத்தியம் செய்பவர்கள் தீமிதியலில் என்ன ஆராய்ச்சி?

கொழும்பு வைத்தியக் கல்லூரி ஆசிரியர்கள், தங்கள் கடமைகளை மறந்து திமிதியலில் ஈடுபடுவதாகத்தெரிகிறது. புதுப்புது நோய்களால் மக்கள் அவதிப்படுகிறார்கள். அவற்றைத் தீர்ப்பதில் அந்தக் கல்லூரி ஆசிரியர்கள் முழுநேரமும் ஈடுபடவேண்டியவர்கள். இதற்காகப் பொதுமக்கள் பணத்திலிருந்து அவர்களுக்குச் சம்பளமும் கொடுக்கப்படுகிறது. அப்படியிருக்க தீமிதியலில் அவர்கள் ஆராய்ச்சிசெய்வது பெருந்தவறானதுடன் தங்கள் கடமையிலிருந்து மீறியவர்களுமாவர்.

வைத்தியக் கல்லூரி கண்காட்சியில் தீமிதியல் நடத்தினர். அதுவே ஒரு தவறு. அதை அத்துடன் விட்டிருக்க வேண்டும். அப்படியின்றி நோன்புக்காகத் தீமிதியல் செய்பவர்களின் உள்ளம் புண்படும்படி ஏதேதோ அறிவித்தனர். பாதத்தின்தோல் தடிப்பாகவும், பாதத்தை நெருப்பில் மிகக் குறைந்த நேரத்துக்கு வைப்பதும் தான் தீ சுடாமல் இருப்பதின் ரகசியம் என்பதைக் கண்டுபிடித்து விட்டார்களாம் இந்தப் பேராசிரியர்கள்! இதில் ஆத்ம சக்தியோ தெய்வ சக்தியோ இல்லை என்று அறிவித்து, ஆனால் மறந்து விட்டேன். தமிழகத்திலிருந்துதான் பழமோ வாழைக்கன்று முதலியவைகளோ இங்கு வர முடியாதே!

0 0 0

தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்கையில் கோவில்களுக்கு பலமான்யங்கள்விட்டு அவற்றின்மூலம் சமூகத்துக்கும் சமயத்துக்கும் பல நன்மைகள் செய்தனர். மன்னர்கள் மறைந்தபின் இப்போதுள்ள அரசாங்கம் கோவில்களுக்கு மான்யங்கள் விடாவிட்டாலும் வரிகளாவதுபோடாமலிருக்கக் கூடாதா? முருகன் உள்ளிட்டுஎல்லாத்தெய்வங்களுக்கும் வரி போடுகிறார்கள். இப்படித் தெய்வங்களுக்கே வரி போடுவது பாவமாகும். அதுமட்டுமல்ல எல்லாருக்கும் பொதுவுடமையான கோவில்கள் சமூகத்துக்கு நன்மைசெய்யமுடியாமற்போகின்றன கோயில்கள்மூலம் அக் காலத்தில் அன்னதானங்கள் நடந்து பட்டினிப் பிரசினைகளைத் தீர்த்து வந்தன. இன்று அதை அடியோடு மறந்து விட்டோம். அரசாங்கத்தால் சமூகத்தின் எல்லாப் பிரச்னைகளையும் தீர்க்க முடியாது. கோயில்கள் மூலம் சிலவற்றைத் தீர்க்க முற்படின் அரசாங்கத்துக்கு மட்டுமன்றி மக்களுக்கும் அது நன்மை அளிக்கக்கூடும்.

இந்தியாவிலே 'செக்யூலர்' (மதச்சார்பற்ற) அரசாங்கம் என்ற காரணத்தால் கோவில்களையும் வழிபடு ஸ்தலங்களையும் அரசாங்கம் பயன்படுத்தாமல் ஒதுக்கியுள்ளது. அப்படியின்றி சமூகத்தின் உயிர் நிலையங்களான, சோஷலிஸ ஸ்தாபனங்களான கோயில்களையும் நன்கு பயன்படுத்தினால் பட்டினிப் பிரச்னை முதலியவற்றை நல்லபடியாகத் தீர்க்க முடியும். தமிழ் மன்னர்களும் அவ்விதமே செய்தனர். ஆனால் இந்த யோசனை இக்காலத்தில் அம்பலம் ஏறுமா?

0 0

குற்றநீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றம்நீபிரானும்நீ தொடர்ந்திலங்கு சோதி நீ
கற்றநூற் கருத்தும் நீ
அருத்தமின்பமென்றிவை
முற்றும்நீ புகழ்ந்து முன்
உரைப்பதென் முகம்மனே.

— சம்பந்தர்.

## 'கீர்த்தனைகளின் சிறப்பை நாம் உணரவில்லை'

தாவடி, வெள்ளி

''இசைத்துறையும் வைத்தியத்துறையும் கடலைப் போன்று மிக்கஆழமானவை அதிலும் இசையானது நறுமணம் வீசும் பலவண்ண மலர்களைக்கொண்ட பூஞ்சோலைபோன்றது, தலைசிறந்த மனதை உருக்கும் எத்தனையோ பல கீர்த்தனைகள் இருக்கும்போது அதனுடைய சிறப்பையறியாத நாம் சினிமாட பாடல்களையேவிரும்பிக் கேட்கும் நிலையிலுள்ளதை எண்ணும்போது வருந்தாமல் இருக்கமுடியாது. கீர்த்தனை, இசைப் பாடல்களின் புனிதத்தன்மையை உணர்ந்தால் சினிமாப் பாடல்களை மனம் நாடாது.''

என்றிவ்வாறு நல்லைஞான சம்பந்தர் ஆதீனத்தில் நடைபெற்றுவரும் அண்ணாமலை இசைத்தமிழ்மன்றஏழாவது நாள் நிகழ்ச்சிகளுக்குத் தலைமைவகித்து உரையாற்றிய வைத்தியகலாநிதி திரு. சி. க. சிவஞானரத்தினம் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், ''திருமுறைப் பண்கள் இருபத்தேழையும், பண்முறை பிறழாது பாடுதல் வேண்டும். இதற்கானஒழுங்குகள் செய்வதுபற்றி நாம் முயற்சிகள் பல செய்துவருகிறோம். சுரக்குறிப்புடன் அடங்கிய தேவாரத் திருமுறைகளின் மூன்றுபாகங்கள் கொண்ட புத்தகங்களை, இசைமன்னர் சித்தூர் சுப்பிரமணியபிள்ளை பார்வையிட்டுவருகிறார். விரைவில் பண்முறை போதிப்பதற்கு வழிவகைகள் செய்யப்படும் எனக் கூறினார்.

## 'பிரயாணகுறைகளை எடுத்துக்கூற வசதி அளிக்கப்பட வேண்டும்'

### இ. போ. ச. தலைவருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு
'வடபகுதி பஸ் சேவை நாளுக்குநாள் மோச

என மக்கள் கருதுகிறார்கள்.

தென் யாழ்ப்பாணம்

ரையும், 'கியூ' ஒழுங்குகளையும் கவனிக்க போக்குவரத்துச் சபை பிரத்தியேக

## வடபகுதி விவசாயிகளுக்கு ஐரோப்பிய உ. கிழங்கு

அம்பன், சனி

வடபகுதியிலுள்ள விவசாயிகளின் காலபோக விதை உருளைக்கிழங்கை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் வழங்கவுள்ளது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இக்கிழங்கு விநியோகம் செய்யப்படும். இதனை குழுவின் தலைவர் உறுதியளித்துள்ளாராம்.

......

## புதிய அசெஸ்கமிஷனர்

கொழும்பு, சனி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலமாக ஈடுபட்டவரான கிரி அவர்கள் கூறியுள்ள இந்த மேலான யோசனையை ஏற்றுக் காரியம் செய்வதாயின், அது தொழிலாளர்களுக்கு நன்மை பயப்பதுடன் நாட்டின் முன்னேற்றத்துக்கும் வழிசெய்யும்.

இந்திய ஜனாதிபதி கூறியிருக்கும் இந்த மேலான ஒரு பகுதி தொழிலாளரின் ஆதரவு பெற்ற சங்கத்தையே அங்கீகரிக்க வேண்டுமென்று முதற்படியாக ஏற்பாடு செய்வதாயின், இங்கு தொழில் அமைதி ஏராளவு ஏற்படுவதுடன், தொழிற் சங்கங்களும் பலப்படவும் முடியக்கூடியதாக இருக்கும்

# 'சுரண்டி வாழும் வாழ்க்கை வேண்டாம்'

## இளைஞர்களுக்கு வட்டு எம்.பி. புத்திமதி

சுழிபுரம், சனி

'உடல் உறுதியும், உள்ளத் தெளிவும் ஊட்டுவன விளையாட்டுகள் எமது வாலிபர்கள் விளையாட்டுப் போட்டியில் பெறும் அனுபவம் உடல் உறுதியாவும், எமது வருங்கால பொருளாதாரத்தைக் கட்டி எழுப்ப உதவ வேண்டும். மேலைத் தேசத்தவரின் அயராத உழைப்பும், தொழில் முன்னேற்றமும் எமது இளைஞர்களுக்கு நல்லபோதனையை ஊட்ட வேண்டும், எமது நாடு தொழில் முன்னேற்றம்பெற வேண்டும். ஒருவரை ஒருவர் சுரண்டி வாழும் வாழ்வு நமக்குவேண்டாம். தொழிற்சாலைகள், கைத்தொழில் கடற்றொழில், விவசாயம் போன்ற சகலதுறைகளிலும் ஈடுபாடு கொண்டு உழைக்க வேண்டும். எமது முன்னேற்றம் நாட்டின் முன்னேற்றமாகவிளங்கவேண்டும்,'

இவ்வாறு வலிகாமம் மேற்கு விளையாட்டுக் கழகங்களின் இரண்டாம் பிரிவினரின் வருடாந்த விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட்டுக்கோட்டைத்தொகுதி ஆட்சி மன்ற உறுப்பினர் திரு. ஆ. தியாகராசா குறிப்பிட்டார். சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில்நடைபெற்ற விளையாட்டுப்போட்டிக்கு வட்டுக்கோட்டை கிராமசபைத் தலைவர் திரு எஸ். நிற்சிங்கம் தலைமை வகித்தார். திரு. ஆ. தியாகராசா மேலும் பேசுகையில். எமது வாலிபர்கள் பிற்போக்கு எண்ணங்களைக் கைவிடவேண்டும். முன்னேற்றப் பாதையில் செல்ல பொருளாதார மேம்பாட்டில் ஈடுபாடுகொள்ளவேண்டும். விளையாட்டுப் போட்டியில் பெற்ற உடல்வலிமை வருங்கால வாழ்வுக்கு வழிகாட்டியாகவேண்டும் என்ருர்.

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி திரு. எஸ். நடராசா பேசுகையில் போட்டியில் ஏற்படும் வெற்றி தோல்வி யாவற்றையும் சமமாக ஏற்கும் மன உள்ளம் எமக்கு வேண்டும். நல்லவழியைக் காட்டுவதே போட்டியின் நோக்கமாகும். திறமை மிகக பயிற்சி வெற்றியைக் கொடுக்கும் என்ருர்.

போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி ஆ. தியாகராசா பரிசில்களை வழங்கினர். திரு. கா. அரிச்சந்திரா நன்றி கூறினர்.

---

## கடற்றொழிலாளருக்கு

# வளமான எதிர்காலம்

கோட்டை...சனி

வீடற்ற நிலமற்ற கடற்றொழிலாளர்களுக்கு கடற்றொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்சா வளமான எதிர்காலத்தையளிக்கவுள்ளார்.

ஆட்சிமன்ற ஆலோசனைக் குழுவின் சிபார்சின்படிகடற்றொழில அமைச்சர் சீர்திருத்தி அமைக்வுள்ளார்.

கடற்றொழிலாளர்களுக்குச் சொந்தமாக நிலமும் வீடும் வழங்கப்படவேண்டுமென மேற்படி குழுவின் தலைவர் திரு. எஸ். டி, ஆர். ஜயரத்தின வலியுறுத்தியுள்ளார்.

இதுகாலவரை உள்ளூராட்சிமன்றங்களே கடற்றொழிலாளர்களுக்கு வீடுகளை அமைத்துக் கொடுத்தன. இந்த முறையை உடனடியாக நீக்கி ஒவ்வொருகடற்றொழிலாளர் குடும்பத்துக்கும் வீடுகட்டுவதற்கு தலா 1800ரூபா கொடுக்க வேண்டுமென குழுசிபார்சு செய்துள்ளது. நிலமற்றவர்களுக்கு நிலமும் வழங்கப்படவுள்ளது.

[illegible]

தான் நீ கடாமல் இருப்பதின் ரகசியம் என்பதைக் கண்டுபிடித்து விட்டார்களாம் இந்தப் பேராசிரியர்கள்! இதில் ஆத்ம சக்தியோ தெய்வ சக்தியோ இல்லை என்று அறிவித்து, ஆஸ்திக மக்களின் மனதைப் புண்படுத்தியுள்ளனர்,

போதும் போதும் இந்த ஆராய்ச்சி. சவால்களும் பதில் சவால்களும் விட்டு, மேலும் மக்களின் மனதைப் புண்படுத்தவேண்டாம் இதனுல் யாருக்கு என்ன பயன்? சுகாதார அமைச்சர் இதில் தலையிட்டு, இந்த வேண்டாத விஷயத்தில் வைத்தியக்கல்லூரி ஆசிரியர் யாரும் இனி ஈடுபடாமல் தடுக்க வேண்டும்.

0 0 0

திருச்சி மாவட்டத்தில் திருமயம் என்னும் ஊரிலே கதலீஸ்வரர் கோயிலில் ஓர் அதிசயம். அங்கு மனிதமுயற்சி எதிவுமில்லாமல், கதலிவாழை மரங்கள் ஏராளமாக வளர்கின்றனவாம். அப்பழங்கள் மருந்துக்குப் பயன்படுவதாகவும், அதைப் பற்றி தமக்கு விபரம் தெரிவிக்குமாறும்கோவில் அதிகாரிகளைக் கேட்டிருப்பதாகவும் தமிழக சட்டசபையிலே ஒரு கேள்விக்கு பதிலளிக்கையில் இந்து தர்மபரிபாலன அமைச்சர் சண்முகம் தெரிவித்தார். விபரங்கள் தெரிந்தபின் இவ்வாழைகளைப் பராமரித்து பல இடங்களிலும் பயிரிட முயற்சி எடுக்கப்படுமென்று தெரிகிறது.

இலங்கையில் இந்தவாழை உண்டா என்று விசாரித்தேன். கதலி வாழை என்ருல் புளிவாழைதான் என்றும், மருத்துவப்பழம் மருந்துக்காக உபயோகமாகிறதென்றும் அறியவந்தேன். ஆனுல் இறைவன் ஏராளமான பழங்களை உற்பத்தி செய்து கொடுத்தாலும், ஏழை மக்களுக்கு அதுகிடைக்கமுடியாதபடி விலைகள் தடுக்கின்றன! இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவிலும்

அப்படித்தான் வெளிநாடுகளுக்கு வாழைப் பழங்களை ஏற்றுமதி செய்து செலாவணியைச் சம்பாதிப்பதால் ஏழைகளுக்குப்பழம் கிடைக்காதபடி போகிறது. நல்ல உணவுப் பொருளான பழங்கள் மக்களுக்கு மலிவாகவும் தாராளமாகவும் கிடைக்க முடியுமாயின் உணவுப் பிரச்னை ஓரளவு தீருவதுடன் மக்களுக்குநோய்களும்குறையக்கூடும். இவ் விஷயத்தில் நம் அமைச்சர்கள் சற்றே கவனம் திருப்புவார்களா? திருச்சியில் உற்பத்தியாகும் அந்தத் தேன்கதலி வாழையைப்பற்றி இலங்கையும் விசாரித்து அதை இங்கும் உற்பத்தி செய்தால் பல விதங்களிலும் நல்லது.

# ...படவேண்டும்

## இ. போ. ச. தலைவருக்கு மகஜர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

'வடபகுதி பஸ் சேவை நாளுக்குநாள் மோசமடைந்து வருகிறது. தினமும் நூற்றுக்கணக்கான பிரயாணிகள் பஸ் தரிப்பு நிலையங்களில், நீண்ட நேரம் காத்திருக்கின்ருர்கள். பஸ் சேவை சீர்கேடு பற்றிப் பல தடவைபுகார் செய்தும் மேலதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை. அரசாங்கம், வடபகுதி பஸ் சேவையைப் புறக்கணித்து வருகிறது' என மக்கள் கருதுகிருர்கள்.

தென் யாழ்ப்பாணம் பஸ் பிரயாணிகள் சங்கத் தலைவர் திரு சி எம் எஸ். நாதன் இலங்கை போக்குவரத்துச் சபை தலைவருக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த மகஜரில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது: அரசாங்க இலாகாக்களில் வேலை செய்யும் ஊழியர்கள் தினமும் காலை 8 மணி முதல் 11 மணிவரை பஸ் தரிப்பு நிலையங்களில் காத்து நிற்கின்றனர் இலங்கை போக்குவரத்து சபை வட பகுதியில் நல்ல முறையில் சேவையாற்றுவதில்லை. பிரயாணிகளின் கஷ்டத்தைப் பற்றி உடனுக்குடன் மேலதிகாரிகளுக்கு அறிவித்தும் பலன் கிடைக்கவில்லை.

சகல பஸ் நிலையங்களுக்கும் அணித்தாயுள்ள புகையிரத நிலையங்களுக்கு அடிக்கடி பஸ் சேவைகளை நடாத்த வேண்டும். இப்படியாக விசேட தினங்களில் அரசாங்கம் போக்குவரத்துச் சேவையை செய்கின்றது இதைத் தொடர்ந்து பரீட்சார்த்த முறையாகவேனும் வட பகுதியில் செயல்படுத்த வேண்டும்.

பழைய பஸ்கள் அடிக்கடி பழுதடைவது பற்றியும் மாரிகாலத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்கள் பற்றியும் பல பிரயாணிகள் சங்கத்திடம் புகார் செய்திருக்கின்றனர் என்றும், மழை காலத்திற்கு முன் பஸ் சேவைக்குத் தடையாயிருக்கும் சகல மரங்களையும் வெட்ட வேண்டுமென்றும், இரட்டைத் தட்டு பஸ்களில் பிரயாணம்செய்வோர்கண்களில் வேலித்தடிகள் அடிப்பதாயும் பஸ் கண்ணுடிகளும் உடைவதாகவும் பாடசாலைக்கு அண்மையாக பஸ்களின் வேகம் குறைக்கப்படவேண்டுமென்றும், வேகக் கட்டுப்பாட்டு அறிவித்தல்கள் ஆங்காங்கு ஏற்படுத்த வேண்டுமென்றும் மகஜரில் கூறப்பட்டதுடன் 'மாகாண ரீதியில் மிகவும் கவனமாகச் சேவை செய்யும் இ.போ.ச ஊழியர்களுக்குப் பரிசில்கள் வழங்கிக்கௌரவிக்க வேண்டும். பொலிஸ் பகுதியார் சந்தை, பாடசாலைகளிலும் மற்றும்விசேட வைபவங்கள் நடைபெறும் போதும் கடமை புரிந்து பஸ் சேவைகளின் ஒழுங்கைக் கவனிக்க ஆவன செய்ய வேண்டும், எனவும் பஸ் தரிப்பு நிலையங்களையும். பஸ் சாரதிகளது ஒழுங்கையும், டிக்கட்டு வழங்குவோரையும், 'கியூ' ஒழுங்குகளையும் கவனிக்க போக்குவரத்துச் சபை பிரத்தியேகமான அதிகாரியை உடன் நியமனம் செய்ய வேண்டும்.

பொதுமக்கள் என்றும் போக்குவரத்துச் சபையாருடன் கலந்து தத்தமது பிரயாணக் கஷ்டங்களைக் கூற வாய்ப்பளிக்க வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது. (குவி.ம

# இன்று கலையரசர் பொன்விழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கலையரசு கே. சொர்ணலிங்கம் திருமணம்செய்து இன்றுடன் 50 ஆண்டுகள் நிறைவுபெறுவதால் கலையரசு தம்பதிகளின் பொன் விழாவைக் கலைநிகழ்ச்சிகளுடன் கொண்டாட, நாடக சினிமாக் கலைஞர்கள் ஒழுங்கு செய்துள்ளனர், இன்று மாலை மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு முதலியார் ஸி. முத்துத்தம்பி தலைமைவகிக்க திரு. செல்வரத்தினம், திரு. ரி எஸ். லோகநாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர். டிங்கிரி சிவகுரு குழுவினரின் நாடகமும், கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும் இவ்விழாவில் கலைஞர்கள் பலர் கலந்துகொள்கின்றனர்.

---

# அளவெட்டி இசைவிழா

## இன்றைய நிகழ்ச்சி

யாழ்ப்பாணம் ஞாயிறு

இன்று அளவை இசைக் கலை மன்றத்தின் 2-வது நாள் இசைவிழா நடைபெறுகிறது இன்றைய நிகழ்ச்சிகளுக்கு வடபிரதேசக்கல்வி அதிபதி திரு வெ சங்கரலிங்கம் தலைமை வகிக்கிருர்.

அளவை இசைக்கலைமன்ற மாணவர்களின் பாட்டு மற்றும் மிருதங்கக் கச்சேரிகளையடுத்து செல்வி நாகம்மா கதிர்காமர், திரு. எஸ். வர்ணகுலசிங்கம் திரு ஏ. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகரின் ஆகியோரின் இன்னிசைக்கச்சேரி இடம் பெறும் திருமதி திலகவதி ஞானசபேசனின் வீணைக் கச்சேரியும் நடைபெறும்.

மாலை 6-30 மணிக்கு நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்.

......

# பொலிஸ் அதிபர் நன்றி தெரிவிக்கிருர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சமீபத்தில் நடைபெற்ற பொலிஸ்தின விழாவைச் சிறப்பாக நடைபெற உதவி செய்த சகலருக்கும் வட மாகாண பொலிஸ் அத்தியட்சகர் திரு. ஆர். சுந்தரலிங்கமும் அவரது உத்தியோகத்தர்களும் தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிருர்கள்.

குறிப்பாக இராணுவ வீரரின் விளையாட்டுகளுக்கு அனுமதிஅளித்து விழாவைச் சிறப்பித்த இராணுவத் தளபதி, ஹெலிகோப்டரை அனுப்பி உதவிய விமானப் படைத் தளபதி ஆகியவர்களுக்கும் மற்றும் உதவியளித்த யாழ். வர்த்தக ஸ்தாபனங்கள், தளபாடங்கள் ஒலிபெருக்கி முதலியன தந்துதவிய சகலருக்கும், இவ்விழாவைச் சிறப்பித்த மக்களுக்கும் யாழ். பொலிஸ் பகுதியினர் நன்றிதெரிவித்துள்ளனர்.

......

# மேலும் 63பேர் விடுதலை

நிக்கோஷிய, 12

பாலஸ்தீன தீவிர அரபுக் கொமாண்டோக்களினுல் திசைதிருப்பப்பட்ட விமானங்களில் இருந்த பிரயாணிகளில் மேலும் 63 பேர் விடுதலை செய்யப்பட்டு இன்று நிக்கோஷியா வந்து சேர்ந்தார்கள் பெரும்பாலும் இவர்கள் அமெரிக்கசுவிட்சர்லாந்து விமானங்களில் பிரயாணம்செய்தவர்கள் ஜோர்டானிய பாலைவனத்தில் வைக்கப்பட்டிருந்த பிரயாணிகளைவான் மூலம் அம்மானுக்கு கொமாண்டோக்கள் அனுப்பிவைத்தனர்

திசைதிருப்பப்பட்ட விமானங்களில் இருந்த இஸ்ரேலியரைத்தவிர்ந்த ஏனையோரை விடுதலை செய்யப்போவதாக கொமாண்டோக்கள் தெரிவித்தனர்,

சாயிகளின் காலபோக விதை உருளைக்கிழங்கை வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம் வழங்கவுள்ளது. பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் இக்கிழங்கு விநியோகம் செய்யப்படும். இதனையொட்டி பலநோக்குககூட்டுறவுச் சங்கங்கள் விதை உருளைக்கிழங்குத் தேவை பற்றிஅங்கத்தினரின்பெயர், அங்கத்தவர் இலக்கம், தோட்டப்பெயர், விஸ்தீரணம் ஆகிய விபரப்பட்டியலைத்தயாரித்து வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசத்திற்கு அனுப்பிவைக்க சமாசம் கேட்டுள்ளது இவ்வாறு செய்யத்தவறும் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஐரோப்பாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் விதை கிழங்கை பெற முடியாதென்று

வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசக் காரியதரிசி து கணேஷ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அறிவித்துள்ளார்

இவ்வருட அடுத்தவருட விதை உருளைக்கிழங்கு ஐரோப்பாவிலிருந்தே இறக்குமதி செய்யப்பட விருப்பதாகவும், யாழ்ப்பாணத்து விவசாயிகளின் விதை உருளைக்கிழங்குத் தேவை அத்தனையையும் விநியோகம் செய்வதற்கு தற்சமயம் யாழ்ப்பாணத்தில் உருளைக்கிழங்கு உற்பத்தி பற்றி விசாரணை செய்து வரும்

# இரு நாடகங்கள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் நாளை இரவு இரு நாடகங்கள் மேடையேற்றப்படுகிறன பஷையூர் வளர்பிறை நாடகமன்றத்தின் கண்டி ராஜன் நாடிக மணி வி. வி. வைரமுத்துவின் மயான காண்டம் ஆகியவையே பிரஸ்தாப நாடகங்களுமாகும்.

......

# ஈழத்துக் கண்கள் லுசாக்காவில் ஒளிகொடுக்கும்

கண்டி, சனி

உடுகம வித்தியாலயத்தின் தலைமை ஆசிரியர் திரு. பண்டாரநாயக்கா தானம் செய்த கண்கள் லுசாக்கா நாட்டுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளன

இவர் கடந்தபுதன்கிழமை கொழும்பு பெரியாஸ்பத்திரியில் மரணமடைந்ததும் இவருடைய கண்களை டாக்டர் ஹட்ஸன் டி சில்வா பெயர்த்தெடுத்தார். லுசாக்கா நாட்டிலுள் நோயாளி ஒருவருக்கு இக்கண்கள் பொருத்தப்படும்.

......

# புதிய அசைஸ் கமிஷனர்

கொழும்பு, சனி

கொழும்பு மாவட்ட நீதிபதி திரு. டி. கியு. எம். சிறிமானே அசைஸ் கமிஷனராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். மாத்தறையில் தென்பகுதிப் பருவகால விசாரணைகள் நடைபெறும் போது அவரும் ஓர் அசைஸ் கமிஷனராகக் கடமையாற்றுவார்.

66 வயதான திரு. சிறிமானே சுப்ரீம் கோர்ட்டுக்குப் பதவியுயர்வு பெறும் முதலாவது புரக்டர் ஆவார். இவர் நீதியரசர் திரு. எல். சிறிமானேயின் சகோதரராவர். ரோயல் கல்லூரியில் கல்வி பெற்றவருமாவார். (சிபிஏ

......

# அவகாசம் கேட்டு தீர்மானம்

மட்டக்களப்பு, சனி

தென்னிந்திய சஞ்சிகைகள் தடைகள் பற்றி தமது கருத்துக்களை வாசகர்களிடமிருந்தும் ஈழத்து எழுத்தாளர்களிடமிருந்தும் இம்மாதம் 15-ம் திகதிக்கிடையில் அறிவிக்குமாறு தபால் அமைச்சர் தலைமையிலான குழு கேட்டிருந்தது சம்பந்தமாக கிண்ணியா இலக்கிய வட்டம் கூடி ஆலோசித்ததுடன் இதற்கான காலக்கெடுவை மேலும் 3 மாதங்கள் நீடித்து உதவவேண்டும் எனத் தபால் அமைச்சரை கோரும்தீர்மானத்தை நிறைவேறியது.

---

# சுவீப் முடிவு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 14 R 0630 | 12 M 0358 |
| 31 U 0839 | 28 V 0127 |
| 31 E 0022 | 06 [illegible] 0645 |
| 02 O 0520 | 01 U 0098 |
| 07 F 0239 | 04 C 0624 |
| 28 K 0499 | 02 M 0366 |

02 [illegible] 0902

இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை)

---

# விஷேட ஒலிபரப்பு

கோட்டை

செல்வச் சந்நிதி தேர்த் திருவிழாவையொட்டி விசேட ஒலிபரப்பு செய்யப்படவிருக்கிறது. இம்முறை செல்வச்சந்நிதி தேர்உற்சவ நிகழ்ச்சிகளைத் திரைப்படமாக்கும்படி திரைப்படசெய்தி இலாகாவை திரு. எம். ஸி. சுப்பிரமணியம் எம்.பி. கேட்டுள்ளார்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org